தினமணி

**விரைவில் சர்க்கரை விலை குறையும்: சரத் பவார்**

First Published : 19 Jan 2010 12:04:00 AM IST



புது தில்லி, ஜன.18: சர்க்கரையின் விலை பொதுச் சந்தையில் விரைவில் குறையும் என்று மத்திய வேளாண் அமைச்சர் சரத் பவார் கூறினார். விலையைக் குறைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கையின் பலன் அடுத்த 10 அல்லது 15 நாள்களில் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசின் நடவடிக்கை காரணமாக சர்க்கரையின் விலையில் மாற்றம் தென்படத் தொடங்கியுள்ளது. முன்பு குவிண்டால் சர்க்கரை ரூ. 4,200-க்கு விற்பனையானது. இது தற்போது ரூ. 3,700 ஆகக் குறைந்துள்ளது.

இதற்கு முன்பு 22 ஆண்டுகளுக்கு முன்பு தில்லியில் சர்க்கரையின் விலை கிலோ ரூ. 47-க்கு விற்பனையானது. தற்போது அதே அளவுக்கு சர்க்கரையின் விலை உயர்ந்துள்ளது.

கரும்பு விளைச்சல் குறைந்ததைத் தொடர்ந்து சர்க்கரையின் விலை அதிகரித்தது. நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 1.60 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. ஆனால் நாட்டின் தேவை 2.30 கோடி டன்னாகும். கடந்த ஒரு வாரத்தில் சர்க்கரை ஆலைகள் அதிக அளவில் கச்சா சர்க்கரையை இறக்குமதி செய்துள்ளன. இதனால் சர்க்கரை விலை மேலும் குறைய வாய்ப்பு உள்ளதாக பவார் தெரிவித்தார்.

÷கடந்த வாரம் பொதுச் சந்தையில் 30 லட்சம் டன் அரிசியை பொதுச் சந்தை விற்பனைக்கு மத்திய அரசு விடுவித்தது குறிப்பிடத்தக்கது.

**புதுவையில் நவீன உயிரி பூச்சிக்கொல்லி அறிமுகம்**

First Published : 19 Jan 2010 01:09:03 AM IST



புதுச்சேரி, ஜன. 18: பயிர்களைத் தாக்கும் பூச்சி மற்றும் புழுக்களின் மீது நோயை உருவாக்கி அழிக்கும் வகையிலான நவீன 2 புதிய உயிரி பூச்சிக் கொல்லி மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

÷இம் மாத இறுதி வாரத்தில் அறிமுகம் செய்யப்பட உள்ள இம் மருந்துகளை புதுச்சேரி காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம் தயாரித்துள்ளது. ÷இவற்றில் "பெவேரியா பேசியானா' என்ற பெயரில் தயாரிக்கப்படும் உயிரி பூச்சிக் கொல்லி மருந்து பவுடர் வடிவத்தில் இருக்கும்.

இது ஒரு நன்மை தரும் வெண்மை பூஞ்சானம். நெல், தக்காளி, மணிலா, பருத்தி, பயறு வகைகள், சூரிய காந்தி,பச்சை மிளகாய், கனகாம்பரம், சாமந்தி, கரும்பு, தென்னை, கத்தரி, பீன்ஸ், வெண்டை,அவரை, மா, தேக்கு, வாழை உள்ளிட்ட பயிர்களைத் தாக்கும் பூச்சி, வண்டுகள், புழுக்கள் மீது நோயை உருவாக்கி அழிக்கும் தன்மை வாய்ந்ததாகும்.

இதே போல, "என்.பி. வைரஸ்' என்ற பெயரிலான உயிரி பூச்சிக்கொல்லி மருந்து நன்மை தரும் வைரஸ் ஆகும். இது திரவ வடிவத்தில் இருக்கும். இதுவும் புழுக்களின் மீது நோயை உருவாக்கி அழிக்க வல்லதாகும்.

குறிப்பாக, தக்காளியைத் தாக்கும் காய்ப்புழு, ஹீலியாதீஸ் என்ற பச்சைப் புழு உள்ளிட்டவைகளை இது தாக்கும். பச்சைப் புழு தாக்கும் மற்ற பயிர்களான மணிலா, பருத்தி, உளுந்து, பயறு வகைகள், காய்கறிகள் தக்காளி, மிளகாய், காலிபிளவர், முட்டைகோஸ், கனகாம்பரம், சாம்பந்தி உள்ளிட்ட பயிர்களுக்கு இதைப் பயன்படுத்தலாம். மேலும், இது விலை மலிவானது. ஓர் ஏக்கருக்கு ரூ.150 மட்டுமே செலவாகும். ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துக்கான செலவைக் காட்டிலும் 3-ல் ஒரு பங்குதான் இதற்குச் செலவாகும். உயிரி பூச்சிக் கொல்லி மருந்தாக இருப்பதால், இது சுற்றுச்சூழலைப் பாதிக்காது. நச்சுத்தன்மையும் கிடையாது. இந்த மருந்தை பயன்படுத்தி சாகுபடி செய்யப்படும் உணவுப் பொருள்களிலும் நச்சுத்தன்மை இருக்காது.

**சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம்**

First Published : 18 Jan 2010 12:23:21 PM IST

தேனி, ஜன. 17: துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுவதாக தேனி தேட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் பூவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து செய்திக் குறிப்பொன்றில் அவர் தெரிவித்துள்ளதாவது:

தமிழ்நாட்டில் விவசாய வளர்ச்சிக்காக மத்திய, மாநில அரசுகள் பல்வேறு சலுகைகளை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. இவற்றில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதற்கு 50 சதவீத மானிய தொகையை அரசு வழங்கி வருகிறது.

இந்நிலையில் துல்லிய பண்ணை திட்டத்தின் கீழ் வாழை மற்றும் காய்கறிகள் பயிரிடுவதற்கு சொட்டு நீர் பாசன முறையை பயன்படுத்த வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர். இந்த திட்டத்தின் மூலம் சொட்டுநீர் பாசனம் அமைக்க 65 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. மேலும் ரூ.15 ஆயிரம் மதிப்பீட்டில் உரம், பூச்சி மருந்து போன்ற இடுபொருள்கள் வழங்கப்படுகிறது.

இந்த திட்டத்தில் பயனாளிகளைத் தேர்வு செய்ய 20 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. பயனாளியாக சேர விருப்பமுள்ள விவசாயிகள் தங்களது நிலங்களுக்கான சிட்டா, அடங்கல், நிலத்தின் வரைபடம், ரேஷன் கார்டு, புகைப்படத்துடன் தேனி மாவட்ட தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர்களை அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

**தீக்குச்சிகள் செய்வதற்கான மரங்களை வளர்க்க அரசு உதவுமா?**

First Published : 18 Jan 2010 12:28:24 PM IST
Last Updated : 18 Jan 2010 01:26:48 PM IST

விருதுநகர், ஜன. 17: தமிழகத்தில் தீக்குச்சி தயாரிக்கத் தேவைப்படும் மர வகைகளை வளர்ப்பதற்கு அரசு வழிகாட்ட வேண்டும் என, தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

விருதுநகர், நெல்லை மாவட்டங்களில் தீப்பெட்டி உற்பத்தி அதிக அளவில் நடைபெற்று வருகிறது. குறிப்பாக, விவசாயத்துக்கு வாய்ப்பில்லாத சிவகாசி, கோவில்பட்டி, சாத்தூர், ஏழாயிரம்பண்ணை, கழுகுமலை, சங்கரன்கோவில் மற்றும் இதன் சுற்றுப்பகுதிகளில் தீப்பெட்டி உற்பத்தி அமோகமாக நடைபெற்று வருகிறது.

குடிசைத் தொழிலான தீப்பெட்டி தயாரிக்கும் பணியில், லட்சக்கணக்கானோர் ஈடுபட்டு வருகின்றனர். இதில், வீட்டிலிருந்தபடியே அதிக அளவில் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தீக்குச்சி தயாரிக்க, மட்டி, அல்பீசியா, ரப்பர், ஆஸ்பின், பாலை, முருங்கை ஆகிய மென்மையான மரங்கள் பெரிதும் பயன்படுகின்றன. ஆனால், இந்த மர வகைகள் கேரள மாநிலத்தில் அதிக அளவில் உள்ளன. இந்த வகை மரங்களை வளர்ப்பதில் கேரளத்தவர் முன்பு அதிக ஆர்வம் காட்டிவந்தனர். ஆனால், தற்போது கேரள மாநிலத்திலும் மேற்குறிப்பிட்ட மர வகைகளை வளர்ப்பதில் ஆர்வம் குறைந்து வருகிறது. காரணம், இந்த மர வகைகளை வளர்த்து ஈட்டும் வருவாயைக் காட்டிலும், கூடுதலாக பணம் ஈட்டும் பயிர் வகைகளை சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டப்படுவதே.

இதனால், தமிழகத்துக்கு தீக்குச்சி தயாரிக்க இந்த மர வகைகள் வருவது குறைந்து வருகிறது. மேலும், கேரளத்திலிருந்து இன்னும் சில ஆண்டுகளுக்கே தீக்குச்சி தயாரிக்கப் பயன்படுத்தும் மர வகைகள் தமிழகத்துக்குக் கிடைக்க வாய்ப்புள்ளது என்று, இங்கு தீக்குச்சி தயாரிப்பில் ஈடுபட்டுள்ளோர் குறிப்பிடுகின்றனர்.

தற்போது, இப்பகுதிகளில் ஏறத்தாழ ஒன்றரை கோடி கிலோ தீக்குச்சிக்கான மர வகைகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக உத்தேச மதிப்பீடு தெரிவிக்கிறது. இந்நிலையில், கேரளத்தில் இவ்வகை மரங்கள் வளர்ப்பதில் ஆர்வம் குறைந்து வருவதால், வெளிநாடுகளிலிருந்து மர வகைகளை இறக்குமதி செய்யும் நிலை உருவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

இதனால் கொள்முதல் விலை அதிகரிப்பதால், தீப்பெட்டி உற்பத்திக்கான அடக்க விலையும் கூடுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே, சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சிரமப்பட நேரிடுகிறது. தொலைநோக்குத் திட்டமாக, தீக்குச்சி தயாரிப்புக்குத் தேவையான மர வகைகளை தமிழகத்தில் வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு, வேளாண், வனத்துறை மூலம் உதவலாம் என, தீக்குச்சி உற்பத்தியாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

ஏற்கெனவே, தமிழகத்தில் குடியாத்தம் வட்டாரத்தில் இவ்வகை மரங்களை வளர்ப்பது தொடங்கிவிட்டது. இதை, பிற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். குறிப்பாக, தென்மாவட்டங்களில் இவ்வகை மரங்களை வளர்க்க அரசு வழிகாட்ட வேண்டும் என தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்துள்ளனர். இதனால், சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பிழைத்துக் கொள்ள வாய்ப்புள்ளது. செய்யுமா அரசு?

**சம்பா நெல் அறுவடைக்கு குறைந்த வாடகையில் இயந்திரங்கள் ஏற்பாடு**

First Published : 19 Jan 2010 12:40:15 AM IST

கடலூர், ஜன. 18: தினமணி செய்தியின் விளைவாக, கடலூர் மாவட்டத்தில் சம்பா நெல் அறுவடைக்கு குறைந்த வாடகையில், அறுவடை இயந்திரங்கள் கிடைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

÷கடலூர் மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்பட்டு உள்ளது. கடந்த 10 நாள்களாக நெல் அறுவடை தொடங்கி நடந்து வருகிறது. நெல் அறுவடைக்குத் தேவையான இயந்திரங்களை, நெல் வியாபாரிகளான இடைத் தரகர்கள் சிலர், வெளி மாவட்டங்களில் இருந்து கொண்டு வந்து, வாடகை அதிகமாகவும் (மணிக்கு ரூ.1,300), அறுவடை ஆகும் நெல்லைத் தங்களிடம்தான் விற்பனை செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்தியும் வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இச்செய்தி தினமணியில் வெளியாகி இருந்தது.

÷இச்செய்தியின் விளைவாக விவசாயிகளுக்கு நியாயமான வாடகையில் அறுவடை இயந்திரங்கள் கிடைக்க, தமிழக அரசு துரித நடவடிக்கை எடுத்தது. வேளாண் துறை அலுவலர்கள் விசாரித்ததில் அறுவடை இயந்திர இடைத்தரகர்கள் செயல்பட்டு வந்தது உறுதி செய்யப்பட்டது.

இப்பிரச்னை தொடர்பாக விவசாயிகளின் பிரதிநிதிகள், வேளாண் துறை அலுவலர்கள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எஸ்.நடராஜன் தலைமையில் கடலூரில் திங்கள்கிழமை நடந்தது.

÷கூட்டம் முடிந்ததும் ஆட்சியர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்ட விவசாயிகள் தற்போது சம்பா நெல் அறுவடையில் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர். அறுவடைக்குப் போதுமான இயந்திரங்கள் இல்லை என்று, விவசாயிகள் தெரிவித்தனர். இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) எஸ்.நடராஜன் தலைமையில் விவசாயிகள், வேளாண் பொறியியல் துறை பொறியாளர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

÷கடலூர் மாவட்ட விவசாயிகளின் பயன்பாட்டுக்காக விழுப்புரம், திருவண்ணாமலை, விருதுநகர், திருவள்ளூர், திருநெல்வேலி மாவட்டங்களில் இருந்து 6 அறுவடை இயந்திரங்கள் (வீல் டைப்) எடுத்து வர முடிவு எடுக்கப்பட்டது.

இதற்கு ஒருமணி நேரத்துக்கு ரூ.780 மட்டும் வாடகையாக விவசாயிகள் செலுத்த வேண்டும்.

÷மேலும் சென்னை நந்தனம் அலுவலகத்தில் இருந்து ஒரு பெல்ட் டைப் அறுவடை இயந்திரத்தைக் கடலூர் மாவட்டத்துக்கு எடுத்து வந்து பயன்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது.  இதற்கு வாடகையாக மணிக்கு ரூ.1,145 செலுத்த வேண்டும் என்றும் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

÷இதுகுறித்து பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் ரவீந்திரன் கூறுகையில், குறைந்த வாடகையில் அறுவடை இயந்திரங்கள் கிடைக்க மாவட்ட ஆட்சியர் ஏற்பாடு செய்து இருக்கிறார்.

அறுவடை இயந்திரங்களை கைவசம் வைத்துக் கொண்டு இடைத்தரகர்களாகச் செயல்படுவோர் குறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு தகவல் தெரிவிக்குமாறும் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டு உள்ளார்.

அத்தகைய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஆட்சியர் உறுதி அளித்து இருக்கிறார் என்றார்.

**வான்கோழி வளர்ப்பு குறித்து நாளை பயிற்சி**

First Published : 19 Jan 2010 01:00:04 AM IST

காஞ்சிபுரம், ஜன. 18: வான்கோழி வளர்ப்பு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி புதன்கிழமை ஜனவரி 20 காஞ்சிபுரம் ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் நடைபெறுகிறது.

இது குறித்து இப் பயிற்சி மையத் தலைவர் ம.ந.சுந்தரராமன் வெளியிட்ட அறிக்கை:

கால்நடை பண்ணை தொழில்களில் வான்கோழி வளர்ப்பு மிகவும் லாபகரமான தொழிலாகும்.

தற்போது வான்கோழி வளர்ப்பு விவசாயிகள் மத்தியில் பிரபலம் அடைந்து வருகிறது.

வான்கோழி இறைச்சி அனைவராலும் விரும்பக் கூடிய இறைச்சி. வான்கோழி பண்ணை தொழிலை சிறிய அளவிலும், பெரிய அளவிலும் செய்யலாம்.

ஆனால் வான்கோழி வளர்ப்பு தொழிலில் ஈடுபடும் முன் நல்ல பயிற்சி அவசியம். வான்கோழி வளர்ப்பு பற்றிய ஒரு நாள் இலவச பயிற்சி வரும் ஜனவரி 20-ம் தேதிபுதன்கிழமை ஏனாத்தூரில் உள்ள உழவர் பயிற்சி மையத்தில் நடைபெறும் என்றார்.

**உழவர் சந்தைகளை மேம்படுத்துங்கள்: அதிகாரிகளுக்கு கருணாநிதி உத்தரவு**

First Published : 19 Jan 2010 01:34:24 AM IST



சென்னை, ஜன.18: ""உழவர் சந்தைகளை மேம்படுத்துவதற்கான பணியில் அரசு இயந்திரம் செயல்பட வேண்டும்'' என்று முதல்வர் கருணாநிதி அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, கேள்வி-பதில் வடிவில் திங்கள்கிழமை அவர் அளித்த விளக்கம்:

""உழவர் சந்தைகள் திட்டம் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில இடங்களைத் தவிர மற்றவை வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன. 2007}ம் ஆண்டு டிசம்பரில் உழவர் சந்தைக்கு வந்த விவசாயிகளின் எண்ணிக்கை 1.90 லட்சம் பேர். 2008-ம் ஆண்டு டிசம்பரில் அது 2.09 லட்சமாகவும், கடந்த ஆண்டில் 2.65 லட்சமாகவும் அதிகரித்துள்ளது.

உழவர் சந்தைக்கு வந்த காய்கறிகளின் வரத்தும், அவற்றை வாங்கிச் செல்லும் நுகர்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதிலிருந்து, எந்த அளவுக்கு உழவர் சந்தைகள் வெற்றிகரமாக நடைபெற்று வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எத்தனை சந்தைகள்...ஏற்கெனவே அமைக்கப்பட்ட 103 உழவர் சந்தைகளோடு இப்போது நிறுவப்பட்ட 45 சந்தைகளையும் சேர்த்து, மொத்தம் 148 சந்தைகள் உள்ளன.

அதில், 59 உழவர் சந்தைகள் மிகவும் நன்றாகவும், 23 சந்தைகள் நன்றாகவும், 30 சந்தைகள் ஓரளவு நன்றாகவும், 22 உழவர் சந்தைகள் நலிந்த நிலையிலும், 14 சந்தைகள் மிகவும் நலிந்த நிலையிலும் நடைபெறுவதாகக் கண்டறியப்பட்டுள்ளன.

நலிந்த நிலையிலும், மிக நலிந்த நிலையிலும் இயங்கி வருகின்ற உழவர் சந்தைகளை மேம்படுத்துவதற்கான பணியில் அரசு இயந்திரம் செயல்பட வேண்டும்.

கலைஞர் காப்பீட்டுத் திட்டம்...கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 2009-ம் ஆண்டு செப்டம்பர் முடிய 4,430 பேர் பயன் அடைந்துள்ளனர். அக்டோபரில் 5,377 பேரும், நவம்பரில் 5,027 பேரும், டிசம்பரில் 10,994 பேரும் பயன் அடைந்துள்ளனர்.

இதன்படி, ஒரு மாதத்தில் இரண்டு மடங்கு பேர் கூடுதலாக இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர். கடந்த 12-ம் தேதியுடன் முடிந்த காலத்தில், பயன் அடைந்த ஒட்டுமொத்த பயனாளிகளின் எண்ணிக்கை 29,355 பேராகும். அவர்களுக்காக வழங்கப்பட்ட தொகை ரூ.91.35 கோடி.

அடையாள அட்டைகள்...காப்பீட்டுத் திட்டத்துக்கான அடையாள அட்டைகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் உள்ள ஆட்சியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அப்படி அனுப்பப்பட்டவை 77.33 லட்சமாகும்.

அதிலே, வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் 40.42 லட்சமாகும். அதாவது, 52 சதவீத அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன. எஞ்சிய அடையாள அட்டைகளையும் உடனடியாக வழங்குமாறு மாவட்ட ஆட்சியர்களை கேட்டுக் கொள்கிறேன்" என்று முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

### செம்மை நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 4575 கிலோ மகசூல் பெற்று சாதனை

First Published : 18 Jan 2010 10:24:03 AM IST
Last Updated : 18 Jan 2010 01:23:55 PM IST

திருச்செங்கோடு, ஜன.17: திருச்செங்கோடு வட்டம் பள்ளிப்பாளையத்தில் செம்மை நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 4575 கிலோ மகசூல் எடுத்து சாதனை படைத்தார் தொலைபேசி ஆலோசனைக் குழு உறுப்பினரும், முற்போக்கு விவசாயியுமான நடனசபாபதி.

இதுகுறித்து பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குநர் பா.முரளீதரன் கூறியது:பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் நடப்பு ஆண்டில் 1800 ஏக்கர் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஓர் ஏக்கருக்கு 3 கிலோ விதை மட்டுமே பயன்படுத்தி ஒரு நாற்றினை சதுர நடவு முறையில் மார்க்கர் என்ற கருவி மூலம் விவசாயிகள் நடவு செய்தனர். களைகளை கோனோவீடர் என்ற கருவி மூலம் நடவு செய்த 10-ம் நாள் முதல் 4 முறை 10 நாட்கள் இடைவெளியில் வயலிலேயே மிதித்து விட்டனர்.

ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின்கீழ் 50 இடங்களிலும், தேசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 100 இடங்களிலும், ஆத்மா திட்டத்தின்கீழ் 50 இடங்களிலும் வயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்பட்டன. மார்க்கர்

கோனோவீடர் ஆகியவை மானிய விலையில் விவசாயிகளுக்குத் தரப்பட்டன. செம்மை நெல் சாகுபடி திடல்களில் உற்பத்தித்தூர்கள் 60 முதல் 100 வரை இருந்தன. கதிர்களில் மணிகள் சராசரியாக 150 முதல் 250 வரை இருந்தன. பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இதர வயல்களை விட செம்மை நெல் சாகுபடியில் மிகக்குறைவாகவே இருந்தது என்றார் அவர்.

அறுவடை துவங்கியுள்ள நிலையில் தெற்குபாளையம் முற்போக்கு விவசாயி நடனசபாபதி செம்மை நெல் சாகுபடி மூலம் தனது வயலில் ஒரு ஏக்கரில் 61 மூட்டை பெற்று சாதனை படைத்துள்ளார். "கடந்த வருடம் 25 சென்ட் பரப்பில் செம்மை நெல் சாகுபடி செய்தேன். நல்ல மகசூல் கிடைத்ததால் இந்த வருடம் ஒரு ஏக்கரில் செம்மை நெல் சாகுபடி செய்தேன். வேளாண்துறை கூறிய அனைத்து தொழில் நுட்பங்களையும் பின்பற்றியதில் இந்த அளவுக்கு மகசூல் கிடைத்தது. ஆகவே அனைத்து விவசாயிகளும் இந்த முறையைப் பின்பற்றினால் நல்ல மகசூல் பெறலாம் ' என்றார் அவர்.

தினமலர்

**உழவர் சந்தையில் வாழைச்சாறு விற்பனை : அசத்தும் ராஜபாளையம் விவசாயி**

ஜனவரி 19,2010,00:00 IST



ராஜபாளையம் : ராஜபாளையத்தை சேர்ந்த விவசாயி ஒருவர், உழவர் சந்தையில் வாழைச்சாறு விற்பனையில் ஈடுபட்டு வருகிறார். ராஜபாளையம் விவசாயி ராஜேந்திரன்(50). 5ம் வகுப்பு வரை படித்துள்ள இவருக்கு கீழராஜகுலராமன் கிராமத்தில் 2 ஏக்கர் நிலம் உள்ளது. ராஜேந்திரன், ராஜபாளையம் உழவர் சந்தையில் காய்கறி விற்பனையில் இறங்கினார்.

காய்கறி பயிரிடுவதற்கான சாகுபடி செலவுகள் அதிகரித்ததை தொடர்ந்து, அதிளவில் வாழை பயிரிடத் துவங்கினார். உழவர் சந்தையில் வாழைப்பூ, தண்டு, இலை, காய்களை விற்று வந்த நிலையில், இவரது வாடிக்கையாளர்கள் பலர், வாழைச்சாறு எங்கு கிடைக்கும் என தொடர்ந்து விசாரிக்க துவங்கினர். இதையடுத்து தானே தினமும் வாழைச்சாறு விற்பனையை துவக்கிவிட்டார். 100 மி.லி. வாழைச்சாறு 10 ரூபாய்க்கு வழங்குகிறார். நாளொன்றுக்கு குறைந்தபட்சம் 6 லிட்டர் விற்கிறார்.

ராஜேந்திரன் கூறியதாவது: சிறுநீரகக் கல்லால் பாதிக்கப்பட்டவர்கள் வாழைச்சாறு அருந்தினால் விரைவில் குணமாகும். எனவே, வாழைச்சாறு விற்பனையை செய்து வருகிறேன். எதிர்பார்த்ததைவிட நல்ல லாபம்

கிடைக்கிறது.தினமும் உழவர் சந்தைக்கு வர முடியாதவர்கள், பாட்டிலில் வாழைச்சாறை வாங்கிச் சென்று, "பிரிட்ஜில்' வைத்து பின் பயன்படுத்துகின்றனர், என்றார்.

மருத்துவம் கூறுவது என்ன: ராஜபாளையம் அரசு ஆஸ்பத்திரி சித்த மருத்துவ பிரிவு உதவி மருத்துவ அலுவலர் டி.கீதா கூறியதாவது: சிறுநீரகத்தில் உள்ள கல்லின் தன்மை ஒவ்வொருவருக்கும் மாறுபடும். அதற்கேற்ப சிகிச்சை வழங்க வேண்டும். சித்த மருத்துவத்தில் இதற்கென, நெருஞ்சிக் குடிநீர், நன்டுக்கல்பற்பம், அமுக்கிரா சூரணம் போன்றவற்றை தருகிறோம்.


சிறுநீரக் கல் நோயால் பாதிக்கப் பட்டோரை, வாழைச்சாறு அருந்துமாறு நாங்கள் ஆலோசனை வழங்குவதில்லை. எனினும், அதை குடித்தாலும் தவறில்லை. பொதுவாக வாழைப்பூ, வாழைத் தண்டு போன்றவற்றை சமைத்து சாப்பிடுமாறு அறிவுறுத்துகிறோம். வாழை சார்ந்த பொருட்களை சாப்பிடுவதன் மூலம், சிறுநீர் அதிகளவில் பிரிவதுடன், எளிதாகவும் வெளியேறும். அதனுடன் சிறிய கற்களும் சேர்ந்து எளிதாக வெளியேறிவிட வாய்ப்புள்ளது. சுத்தமான முறையில் சேகரிக்கப்பட்ட வாழைச்சாறை காலை வேளைகளில் அளவோடு குடிப்பது நல்லது, என்றார்.

விவசாயத்தில் அதிக லாபம் பெற மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை விற்பனை செய்யுங்கள் என விவசாய அறிஞர்கள் பலர் வலியுறுத்துகின்றனர். அதாவது, மாம்பழமாக விற்காதீர்கள், மாம்பழக் கூழ் தயாரியுங்கள். அதே போல், பசும் பாலை பால்கோவாகவும், கொய்யாப்பழத்திலிருந்து ஜூஸ் தயாரித்தும், வெங்காயம், பூண்டு உள்ளிட்டவற்றை ஊறுகாயாகவும் மாற்றி விற்பனை செய்தால் கூடுதல் லாபம் பெறலாம் என அறிவுறுத்துகின்றனர்.

அந்த வகையில் வழக்கமான முறையில் இருந்து மாறி, வாழைச்சாறைக்கூட வணிகப் பொருளாக மாற்றி விற்பனை செய்து வருகிறார் ராஜேந்திரன்.

### நலிந்த நிலையில் 22 உழவர் சந்தைகள்:முதல்வர் தகவல்

ஜனவரி 19,2010,00:00 IST



சென்னை:"தமிழகத்தில் மொத்தமுள்ள 148 உழவர் சந்தைகளில், 22 உழவர் சந்தைகள் நலிந்த நிலையிலும், 14 உழவர் சந்தைகள் மிகவும் நலிந்த நிலையிலும் நடப்பதாக கண்டறியப்பட்டுள்ளது' என, முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ஒரு சில இடங்களைத் தவிர, மற்ற உழவர் சந்தைகள் எல்லாம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. 2009ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், உழவர் சந்தைக்கு வருகை தந்த விவசாயிகளின் எண்ணிக்கை இரண்டு லட்சத்து 65 ஆயிரத்து 671 பேர்.

மொத்தமுள்ள 148 உழவர் சந்தைகளில் மிகவும் நன்றாக 50 உழவர் சந்தைகளும், நன்றாக 23 உழவர் சந்தைகளும், ஓரளவு நன்றாக 30 உழவர் சந்தைகளும் நடைபெறுகின்றன. நலிந்த நிலையில் 22 உழவர் சந்தைகளும், மிகவும் நலிந்த நிலையில் 14 உழவர் சந்தைகளும் நடப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. நலிந்த நிலையில் இயங்கி வரும் உழவர் சந்தைகளை அரசு மேம்படுத்தும்.உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 2009ம் ஆண்டு செப்டம்பர் வரை 4,430 பேரும், அக்டோபரில் 5,377 பேரும், நவம்பரில் 5,027 பேரும், டிசம்பரில் 10 ஆயிரத்து 994 பேரும் பயனடைந்துள்ளனர்.

நவம்பர் மாதத்திற்கும், டிசம்பர் மாதத்திற்கும் இடையே, இரண்டு மடங்கு பயனாளிகள் கூடுதலாக பயனடைந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக, இந்த மாதம் 12ம் தேதி வரை 29 ஆயிரத்து 355 பேர் பயனடைந்துள்ளனர். இவர்களின் சிகிச்சைக்காக, 91 கோடியே 35 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.கடந்த 5ம் தேதி நிலவரப்படி, காப்பீட்டுத் திட்டத்திற்கு 77 லட்சத்து 33 ஆயிரம் அடையாள அட்டைகள், கலெக்டர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதில், 52 சதவீதமான, 40 லட்சத்து 42 ஆயிரத்து 169 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு விட்டன; எஞ்சிய அட்டைகளை உடனடியாக வழங்க உத்தரவிடப் பட்டுள்ளது.இவ்வாறு முதல்வர் கருணாநிதி, அறிக்கையில் கூறியுள்ளார்.

**தேங்காய் விற்பனைக்கு வரி நிலுவை தள்ளுபடி**

ஜனவரி 19,2010,03:32



சென்னை: மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், 2002 ஏப்ரல் முதல் 2006 செப்டம்பர் 5ம் தேதி வரையிலான காலத்தில், மாநிலங்களுக்கு இடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு செலுத்த வேண்டிய மத்திய விற்பனை வரி நிலுவைத் தொகை மற்றும் தண்டத் தொகை, 90 கோடியே 60 லட்சம் ரூபாயை தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

மாநிலங்களுக்கு இடையே விற்பனை செய்யப்படும் தேங்காய், மத்திய விற்பனை வரி செலுத்துவதில் இருந்து விலக்கு பெற தகுதி பெறுவதாகவும், இதற்கு 'சி' படிவம் தேவையில்லை என்றும், மதுரை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் 2002ல் தீர்ப்பளித்தது. இதன்படி, தமிழகத்தில் உள்ள தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள், மாநிலங்களுக்கு இடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு வரி வசூலிப்பதை நிறுத்தி விட்டதாகவும், பல்வேறு வரி மதிப்பீடு அலுவலகங்களில் நடத்திய தணிக்கைகளில், மாநில கணக்குத் தலைவர் அலுவலகத்தின் தணிக்கை குழு, 'சி' படிவம் இல்லாமல் மாநிலங்களுக்கு இடையே விற்ற தேங்காய்களுக்கு வரி விலக்கு அளித்தது முறையல்ல என்று வணிகவரி ஆணையர் தெரிவித்து இருந்தார். மேலும்,

இதற்கு 8 சதவீத வரி விதிக்க வேண்டுமென்றும் பரிந்துரைத்து இருந்தார். இதை எதிர்த்து, தேங்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கம் சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தது. இதற்கு அளிக்கப்பட்ட தீர்ப்பில், 'மாநில விற்பனை வரிச் சட்டத்தில் தேங்காய் விற்பனைக்கு பொதுவான வரி விலக்கு அளிக்கப்படாததால், மாநிலங்களுக்கு இடையே விற்கப்படும் தேங்காய்கள் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் வரிவிதிப்புக்கு உட்படும்' எனத் தெரிவிக்கப்பட்டது. இதை எதிர்த்து வணிகர்கள், சென்னை ஐகோர்ட்டில் மேல்முறையீடு மனு செய்து, அது நிலுவையில் உள்ளது. இதைத் தொடர்ந்து, தேங்காய் உற்பத்தியாளர்கள் சங்கம், 2002 ஏப்ரல் முதல் 2006 செப்டம்பர் 5ம் தேதி வரையிலான காலத்துக்கு வரி தள்ளுபடி செய்ய கோரிக்கை விடுத்தது. இதைத் தொடர்ந்து, சேலம், வேலூர், திருச்சி, மதுரை, கோவை, நெல்லை ஆகிய ஆறு மண்டலங்களில், 2002 ஏப்ரல் 1ம் தேதியில் இருந்து 2006 செப்டம்பர் 5ம் தேதி வரை, மாநிலங்களுக்கு இடையே விற்கப் பட்ட தேங்காய்களுக்கு, செலுத்த வேண்டிய மத்திய விற்பனை வரித் தொகை மற்றும் அதற்கான தண்டத் தொகை மொத்தம், 90 கோடியே 60 லட்சத்து 30 ஆயிரத்து 552 ரூபாயை தள்ளுபடி செய்ய, வணிக வரிகள் துறை ஆணையர், அரசிடம் கோரிக்கை வைத் தார். இதை ஏற்று, குறிப்பிட்ட காலத்துக்குள் விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கான வரித் தொகை மற்றும் தண்டத் தொகையை தள்ளுபடி செய்து அரசு உத்தரவிட்டுள்ளது.

## எரிசக்தி சிக்கனம் குறித்த விழிப்புணர்வு பிரசாரம்

சென்னை : நாட்டின் மிகப்பெரிய தேவையான எரிபொருள் சிக்கனத்தை, மக்களுக்கு உணர்த்தும் வகையில், பெட்ரோலிய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி கூட்டமைப்பு சார்பில், விழிப்புணர்வு பிரசார துவக்க விழா, நேற்று, சென்னையில் நடந்தது. எரிபொருள் சிக்கனத்தை வலியுறுத் தும் வாசகங்கள் அடங்கிய புத்தகங்களை, தமிழக அரசின் போக்குவரத்து துறை அமைச்சர் நேரு வெளியிட, இந்தியன் ஆயில் கார்பரேஷனின் மாநில ஒருங்கிணைப்பாளர் பிரசாத் பெற்றுக் கொண்டார். விழாவில் அமைச்சர் நேரு பேசியதாவது: நாளுக்கு நாள் பெட்ரோல் மற்றும் இயற்கை எரிவாயுவின் தேவை அதிகரித்து வருகிறது. விஞ்ஞானிகள் கணக்குப் படி, இன்னும் 40 வருடங்களுக்கு தான், பெட்ரோல் கிடைக்கும். நாம் இன்று பெறும் அனைத்து வசதிகளையும், நமக்கு பின் வருவோர் பெறும் வகையில், எரிபொருள் சிக்கனத்தை கடைபிடிக்க வேண்டும். எரிபொருள் சேமிப்பை கருத்தில் கொண்டு, தமிழக போக்குவரத்து கழக பஸ்கள் புதுப்பிக் கப்பட் டுள்ளன. தற்போது இயங்கும் பஸ்களின் ஆயுட்காலம், 4.4 ஆண்டுகளிலிருந்து, 6.2 ஆண்டாக உயர்ந்துள்ளது. புதிய வாகனங் கள் இயக்கத்திலிருப்பதால், நாளொன் றுக்கு 1.1 லட்சம் லிட்டர் எரிபொருளும், 48 லட்சம் ரூபாயும் மிச்சமாகிறது. போக்குவரத்து துறைக்கு, நாடு முழுவதிலும் வழங்கப்பட்ட 19 விருதுகளில், தமிழக போக்குவரத்து துறைக்கு, எட்டு விருதுகள் கிடைத் துள்ளன. இவ்வாறு அமைச்சர் நேரு பேசினார். எரிபொருள் சிக்கனத்தை வலியுறுத் தும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய வாகனத்தையும் அமைச்சர் நேரு, கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், ஹிந்துஸ்தான் பெட் ரோலியம் கார்பரேஷன் தென் மண்டல பொது மேலாளர் ராதாகிருஷ்ணன், பாரத் பெட்ரோலியம் கார்பரேஷன் வியாபார பிரிவு பொது மேலாளர் ராமு, இந்தியன் ஆயில் கார்பரேஷன் மண்டல ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன் மற்றும் பெட் ரோலிய பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி கூட்டமைப்பின் மண்டல ஒருங்கிணைப்பாளர் சிவகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## ஆனைமலை கொப்பரை ஒரு கிலோ 30.10 ரூபாய்

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 30.10 ரூபாய் விலை கிடைத்தது. ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 14 பேர் 40 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை தரம் பிரித்து ஐந்து வியாபாரிகள் ஏலம் கூறினர். விற்பனைக்கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலத்தை நடத்தினார். முதல் தர கொப்பரை 35 மூட்டை ஏலம் விடப் பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 26 ரூபாய் முதல் அதிகபட்சமாக 30.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண் டாம் தர கொப்பரை ஐந்து மூட்டை ஏலம் விடப் பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 16 ரூபாய் முதல் அதிகபட்சமாக 22 ரூபாய் வரை விலை கிடைத்தது.

அதிகாரிகள் கூறுகையில், "ஆனைமலை சுற் றுப் பகுதியில் கொப்பரை உற்பத்தி செய்யும் விவசாயிகள் பொங்கல் பண்டிகைக்கு விடுமுறை கொடுத்ததால் கொப் பரை உற்பத்தி குறைந்துள் ளது. வெளிமார்க்கெட்டில் கொப்பரை கிலோ 34 ரூபாய் விலை கிடைக்கும் நிலையில், ஏலத்திற்கு கொண்டு வரப்பட்ட கொப்பரையில் ஈரப்பதம் அதிகமாக இருந்ததால் விலை குறைத்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த வாரத்தில் இருந்து கொப்பரை விலை உயரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது' என்றனர்.

## விதை வாங்கும் முன் உஷார்! விவசாயிகளுக்கு அறிவுரை

கோவை : "விதையின் தரத்தை பரிசோதித்த பின்னரே, விவசாயிகள் விதைக்க வேண்டும்' என, விதைச் சான்றளிப்புத்துறை தெரிவித்துள்ளது. விதைச்சான்று உதவி இயக்குனர் (பொறுப்பு) கார்முகிலன் அறிக்கை: விவசாயிகள், விதை வாங்கும்போது சான்றட்டை, விபர அட்டையில் உள்ள விபரங்களை சரி பார்க்க வேண்டும். அதில் பயிர் ரகம், நிலை, குவியல் எண், காலாவதி நாள் மற்றும் முளைப்புத்திறன் விபரங்கள் சரியாக இருந்தால் மட்டுமே வாங்க வேண்டும். விதையின் தரம் குறித்த அறிக்கையினை விற்பனையாளரிடம் கேட்க வேண்டும். விதை விதைக்கும் முன் அருகில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் கொடுத்து பரிசோதனை செய்ய வேண்டும்; இதற்கு 30 ரூபாய் மட்டுமே கட்டணம். மேலும் விபரங்களுக்கு, விதைச்சான்று இயக்குனர், 1424 - ஏ தடாகம் சாலை, ஜி.சி.டி (அஞ்சல்), கோவை-13 என்ற முகவரியை அணுகலாம் அல்லது 0422 - 243 2984 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு, உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## உருண்டது, தக்காளி விலை!ஒரே நாளில் தலைகீழ் மாற்றம்

கோவை : கோவையில் கிலோ ரூ.20 ரூபாய்க்கு விற்ற தக்காளி, ஒரே நாளில் கிலோ 3 முதல் 7 ரூபாயாக தரத்துக்கு ஏற்ப விற்பனையானது. அதிகளவில் வந்து குவிந்ததாலும், கேரள வியாபாரிகளின் வருகை இல்லாததாலும், விலையில் திடீர் சரிவு ஏற்பட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர். கோவை மார்க்கெட்களில் அத்தியாவசிய காய்கறிகளின் விலை, தொடர்ந்து ஏறுமுகத்தில் உள்ளது. பொங்கல் பண்டிகைக்கு முந்தைய வாரத்தில் 13 - 15 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி 270 ரூபாய்க்கு விற்றது. சில்லரை முறையில், கிலோ 20 ரூபாய்க்கு விற்றது.சீசன் துவங்கியுள்ளதால் வடகோவை மொத்த காய்கறி மார்க்கெட்டுக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், நாச்சிபாளையம் மார்க்கெட்டுக்கு மதுக்கரை வட்டாரம் மற்றும் கேரள எல்லையோர கிராமங்களில் இருந்தும் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது.

தவிர, கோவை மார்க்கெட்டுக்கு கர்நாடக மாநிலம், மாண்டியா மாவட்டத்தில் இருந்து தினமும் 10 லோடு தக்காளி லாரிகளில் வருகிறது. கர்நாடகாவை விட கோவையில் விலை அதிகம் என்பதால், அம்மாநில விவசாயிகள் கோவை மார்க்கெட்டுக்கு தக்காளி உள்ளிட்ட காய்கறிகளை கொண்டு வருவதை வழக்கமாக கொண்டுள்ளனர். நாச்சிபாளையம் மார்க்கெட்டில் நேற்று முன் தினம் 270 ரூபாய் வரை விற்ற ஒரு கூடை தக்காளி, திடீரென நேற்று கூடைக்கு 50 முதல் 70 ரூபாய் வரை சரிந்தது. கோவை மார்க்கெட்டிலும் இதே விலை நிலவரம் காணப்பட்டது. நேற்று முன்தினம் 10 முதல் 12 ரூபாய் வரை விற்ற ஒரு கிலோ தக்காளி, நேற்று கிலோ மூன்று முதல் ஏழு ரூபாய் வரை தரத்துக்கு ஏற்ப விற்பனையானது. இந்த திடீர் சரிவு குறித்து மார்க்கெட் வியாபாரிகள் கூறியதாவது: பொங்கல் பண்டிகைக்காக கடந்த இரண்டு நாட்களாக தக்காளி அறுவடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. பண்டிகை முடிந்ததும், மார்க்கெட்டுக்கு அதிகளவில் தக்காளி வந்து குவிந்தது. தவிர, கர்நாடகா மாநிலத்தில் ருந்தும் நேற்று ஒரே நாளில் 25 லோடு தக்காளி வந்தது. தக்காளி வரத்து அதிமாக இருந்தும், வாங்க வந்த வியாபாரிகளின் எண்ணிக்கை மிகக் குறைவு. நகர் பகுதி தள்ளுவண்டி வியாபாரிகளே ஏலத்தில் அதிகம் காணப்பட்டனர். மேலும், மேற்கு வங்க முன்னாள் முதல்வர் ஜோதிபாசுவின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், கேரளாவில் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டன. சரக்கு வாகனங்களும் அதிகம் ஓடவில்லை. இதன் காரணமாக, அங்கிருந்து வியாபாரிகள் யாரும் வரவில்லை. வரத்து அதிகம் இருந்தும் வியாபாரிகள் இல்லாதது தக்காளி விலை

சரிவுக்கு முக்கிய காரணம்; இன்னும் சில நாட்களுக்கு இதே விலை நீடிக்கும். கேரள வியாபாரிகள் வந்தால் மீண்டும் விலையேற்றம் இருக்கலாம். இவ்வாறு, வியாபாரிகள் தெரிவித்தனர்.

### பயறு வகை சாகுபடியில் விவசாயத்துறை மும்முரம்

திண்டுக்கல்: நெல் அறுவடை தொட ங்க உள்ள நிலையில், தரிசு நிலங்களில் பயறு வகை சாகுபடியில் விவசாயத் துறை ஆர்வம் காட்டி வருகிறது.திண்டுக்கல் மாவட்டத் தில் 2ம் போக நெல் அறுவடை தொடங்க உள்ளது. அறுவடைக்கு பின்னர் தரிசு நிலத்தில் சாகுபடி செய்ய வசதியாக விவசாயிகளுக்கு நில நீர் மேம் பாட்டு திட்டத்தில் மானிய விலையில் பயறு வகைகள் வழங்கப்படுகின்றன. இதற்காக பயறு வகை விதைகளை சேகரிக்கும் பணியில் விவசாயத்துறை ஈடுபட்டுள்ளது. அனைத்து வகை பயிர் விதைகளுக் கும் அதிகளவு மானிய சலுகை வழங்கப் படுகிறது என விவசாயத் துறை மும் முரமாக பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

### மஞ்சள் வரத்து குறைந்தாலும் ரூ. 300 வரை விலை வீழ்ச்சி

ஈரோடு: பொங்கல் பண்டிகை முடிந்து மஞ்சள் மார்க்கெட் துவங்கிய முதல் நாளே மஞ்சள் வரத்து குறைந்து காணப்பட்டது. மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 300 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்தது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஜனவரி 13ம் தேதி முதல் ஐந்து நாட்கள் விடுமுறை. கடைசியாக ஜனவரி 12ம் தேதி ஒழுங்கு முறை விற்பனை கூடத்துக்கு 1,718 மூட்டை, வெளிமார்க்கெட்டுக்கு 2,966 மூட்டை, ஈரோடு சொசைட்டிக்கு 736 மூட்டை, கோபி சொசைட்டிக்கு 250 மூட்டை என 5,670 மூட்டை வரத்தானது. விரலி ஒரு குவிண்டால் 11 ஆயிரத்து 77 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 969 ரூபாய்க்கு விற்கப்பட்டது. பொங்கல் விடுமுறைக்கு பின் நேற்று மீண்டும் மார்க்கெட் துவங்கியது. விடுமுறைக்கு பின் மார்க்கெட் துவங்குவதால் மஞ்சள் வரத்து அதிகரிக்கும் என வியாபாரிகள் எதிர்பார்த்தனர். ஆனால், எதிர்பார்ப்புக்கு மாறாக மஞ்சள் வரத்து குறைந்தே காணப்பட்டது.

ஈரோடு ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு 504 மூட்டைகள் வரத்தானதில் 202 மூட்டைகள் விற்பனையானது. விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 859 ரூபாய், கிழங்கு மஞ்சள் ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 637 ரூபாய்க்கு விற்பனையானது. வெளி மார்க்கெட்டுக்கு 830 மூட்டைகள் வரத்தானதில் 216 மூட்டைகள் விற்பனையானது. விரலி ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 839 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 656 ரூபாய்க்கு விற்பனையானது.

ஈரோடு சொசைட்டிக்கு 89 மூட்டைகளே வரத்தானதில் முழுவதும் விற்பனையானது. விரலி ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 869 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 671 ரூபாய்க்கு விற்பனையானது. கோபி சொசைட்டிக்கு 70 மூட்டைகள் வரத்தானதில் 25 மூட்டைகள் விற்பனையானது. விரலி ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 866 ரூபாய், கிழங்கு ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 716 ரூபாய்க்கு விற்பனையானது. மஞ்சள் விலை அதிகரிக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்தனர். ஆனால், குவிண்டாலுக்கு 300 ரூபாய் வரை விலை வீழ்ச்சியடைந்தது. விவசாயிகள் வரத்து குறைந்து காணப்பட்டதால் மஞ்சள் வரத்தும் குறைந்தே காணப்பட்டது. வியாபாரிகள் கூறுகையில், "விவசாயிகள் அனைவரும் பொங்கல் பண்டிகை கொண்டாடியுள்ளதால், விடுமுறைக்கு பின் விவசாயிகள் வரவில்லை. சில நாட்களாக புதிய மஞ்சள் வரத்தாகிறது. புதிய மஞ்சள் விலையும் நன்றாக உள்ளது. மாவட்டம் முழுவதும் ஆங்காங்கே மஞ்சள் அறுவடை பணி நடப்பதால் இம்மாதம் முடிவில் மஞ்சள் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

## நெல் அறுவடைக்கு தென் மாவட்ட கூலியாட்கள் கோபி வட்டாரத்தில் நூற்றுக்கணக்கானோர் முகாம்

கோபிசெட்டிபாளையம்: கோபி அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதியில் இரண்டாம் போகத்தில் பயிரிடப்பட்டிருந்த நெல் அறுவடை தாமதமாக துவங்கியுள்ளது. சென்றாண்டு போதிய மழை இல்லாமல் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்டங்களில் இருந்து வந்த நூற்றுக்கணக்கான விவசாய கூலியாட்கள் கோபியில் முகாமிட்டுள்ளனர். அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிக்கு ஆண்டுதோறும் இரண்டு முறை பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. 24 ஆயிரம் ஏக்கர் கொண்ட அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசனப் பகுதிகளில் 15 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. குறிப்பாக ஏ.டி.டி., 39, 45, டீலக்கஸ் பொன்னி, காவேரி, சுரணா, கோமல் உள்ளிட்ட நெல் ரகங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வழக்கம் போல் பவானிசாகர் அணையில் இருந்து இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் விடப்பட்டும், கூலியாட்கள் பற்றாக்குறையால் நெல் நடவுப் பணிகள் தாமதமாக துவங்கியது.

நெற்பயிர் தற்போது அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. வழக்கமாக கோபி பகுதியில் தை மாதத்துக்கு முன் 50 சதவீத அறுவடைப் பணி முடிந்து விடும். விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் பொங்கல் பண்டிகை முடிந்த நிலையில் தற்போதுதான் நெல் அறுவடைப் பணிகள் தாமதமாக துவங்கியுள்ளது. வழக்கமாக கோபிக்கு சேலம், தர்மபுரி, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவில் விவசாய கூலியாட்கள் கோபிக்கு வருவர். தென்மாவட்டங்களில் சென்றாண்டு எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. இதனால் மதுரை உள்ளிட்ட தென் மாவட்டங்களில் விவசாயப் பணிகள் பெரியளவில் இல்லை. அங்கிருந்து கோபிக்கு விவசாய கூலியாட்கள் வந்த வண்ணம் உள்ளனர். விவசாய கூலியாட்களுக்கு ஒரு ஏக்கருக்கு ஆறு மூட்டை நெல் (தலா 66 கிலோ) கூலியாக வழங்கப்படுகிறது. நிலத்தில் ஈரப்பதம் மற்றும் சேறு அதிகம் இருந்தால், ஏழு மூட்டைகள் கூலியாக வழங்கப்படுகிறது.

விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் நெல் அறுவடை எந்திரங்களுக்கான வாடகையும் நடப்பாண்டு உயர்ந்துள்ளது. பெல்ட் ரக எந்திரத்துக்கு 1,500 ரூபாயில் இருந்து 2,000 ரூபாய் வரையிலும், டயர் ரக எந்திரத்துக்கு 1,000 ரூபாயில் இருந்து 1,500 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. எந்திரங்கள் மூலம் அறுவடை செய்யப்படும் ஆறு கிலோ வைக்கோல் மூன்று ரூபாய்க்கும், விவசாய கூலியாட்கள் மூலம் அறுவடை செய்யப்படும் ஆறு கிலோ வைக்கோல் ஏழு ரூபாய்க்கும் விலை கிடைக்கிறது. நெல் மற்றும் வைக்கோலுக்கு கூடுதல் விலை கிடைப்பதால், விவசாய கூலியாட்கள் மூலம் அறுவடை செய்யவே, கோபி பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## ரூ. 6 லட்சம் காய்கறி விற்பனை

கோபிசெட்டிபாளையம்: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோபி உழவர் சந்தையில் ஐந்து நாட்களில் மட்டும் ஆறு ட்சம் ரூபாய்க்கு காய்கறி விற்பனை நடந்தது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 13ம் தேதி முதல் 17ம் தேதி வரை 46 ஆயிரத்து 441 கிலோ காய்கறி உழவர் சந்தைக்கு வந்தது. ஆறு லட்சத்து 9 ஆயிரத்து 454 ரூபாய்க்கு அவை விற்றன. ஐந்து நாட்களில் மட்டும் 450 விவசாயிகளும், 9,250 பொதுமக்களும் கோபி உழவர் சந்தைக்கு வந்துள்ளனர்.

## விவசாயிகளுக்கு பயிற்சி

வாலாஜாபாத் : வாலாஜாபாத் வட்டார வேளாண்மை அலுவலகம் சார்பில், விதை கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வாலாஜாபாத் வேளாண்மை உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கினார். வேளான்மை விதைச்சான்று உதவி இயக்குனர் மகாலிங்க கண்ணன்,வேளாண்மை அலுவலர்

ஞானசேகரன் ஆகியோர் விதைகள் உற்பத்தி மற்றும் விதைச்சான்று குறித்த பயிற்சியைத் துவக்கி வைத்தனர். நெல்விதைச் சான்று குறித்து புத்தகரம், தாங்கி கிராமங்களிலும், சிறு தானியப் பயிர்கள் குறித்து நல்லூர்,சிறுவள்ளூர் கிராமங்களிலும், பயறு வகைகள் குறித்து ஓடந்தாங்கல், வில்லிவலம் கிராமங்களிலும், எண்ணெய் வித்து பயிர்கள் குறித்து சிறுபாகல், நத்தாநல்லூர் கிராமங்களிலும் விவசயிகுளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. வாலாஜாபாத் வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி பயிற்சி அளித்தார்.

## இலவச வான்கோழி வளர்ப்பு பயிற்சி

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம் உழவர் பயிற்சி மையத்தில், நாளை இலவசமாக வான் கோழி வளர்ப்பு பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் அடுத்த ஏனாத்தூர் கிராமத்தில், உழவர் பயிற்சி மையம் அமைந்துள்ளது. இங்கு விவசாயிகள் நலன் கருதி, கால்நடை வளர்ப்பில் உள்ள புதிய தொழில் நுட் பங்கள், கால்நடை மற் றும் கோழி வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கப் படுகிறது. வரும் 20ம் தேதி, வான் கோழி வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. வான் கோழி வளர்ப்பு பயிற்சி வகுப்பில் விவசாயிகள், உழவர் மன்ற ஆண் மற் றும் பெண் அமைப்பாளர் கள், சிறுதொழில் புரிவோர், வேலையில்லா இளைஞர்கள், சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் 044-27264019 என்ற டெலிபோன் எண்ணை தொடர்பு கொண்டு, தங்களது பெயரை பதிவு செய்து கொள்ளலாம் என, உழவர் பயிற்சி மையத் தலைவர் சுந்தரராமன் தெரிவித்துள்ளார்.

## அறுவடை இயந்திர ஆபரேட்டர் தேர்வு

மதுரை:மதுரை வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகத்தில் ஒருங்கிணைந்த கதர் அறுவடை இயந்திர ஆபரேட்டர் தேர்வு நடக்க உள்ளது.தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் மாதம் ஐந்தாயிரம் ரூபாய் உழைப்பூதியம் வழங்கப்படும். எட்டாம் வகுப்பு தேர்ச்சி, கனரக வாகன ஓட்டுநர் உரிமம் பெற்ற, ஒரு ஆண்டு கதிர் அறுவடை இயந்திரம் அல்லது உழுவை இயந்திரம் இயக்கிய முன்அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஜன. 21ம் தேதி காலை 10 மணிக்கு, "செயற்பொறியாளர் அலுவலகம், 60, திருப்பரங்குன்றம் ரோடு, தமிழ்நாடு பாலிடெக்னிக் அருகில், மதுரை' என்ற முகவரியில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் உரிய சான்றுகளுடன் பங்கேற்கலாம், என கலெக்டர் மதிவாணன் தெரிவித்தார்.

### ஜன.22ல் விவசாயிகள்குறைதீர் கூட்டம்

மதுரை;ஜனவரி மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற ஜன. 22ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்க உள்ளது. விவசாயிகள் இதில் பங்கேற்று பிரச்னைகள், குறைகளை நேரில் தெரிவிக்கலாம் என கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார்.

## 'ஜமுனாபாரி' ஆடு வளர்ப்பில் விவசாயிகள்: ஆட்டின் விலை ரூ.50 ஆயிரம்

பாலமேடு: "ஜமுனாபாரி' ஆடு வளர்ப்பில் மதுரை விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். 80 கிலோ எடையுள்ள ஆட்டின் அதிகபட்ச விலை 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது.பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட ஜமுனாபாரி ஆட்டின் காதின் நீளம் ஒரு அடி; அகலம் 10 இஞ்ச். பார்ப்பதற்கு அழகாக இருக்கும். ஆண் ஆடுகள் ஐந்தடி உயரமும், பெண் ஆடுகள் நான்கடி உயரமும் வளரக்கூடியது.

வளர்ந்த ஆட்டின் குறைந்தபட்ச எடை 80 கிலோ வரை அதிகரிக்கும். ஆட்டின் கறி, மிருதுவாகவும், அதிக சுவையுடன் இருப்பதால் மாமிச பிரியர்களுக்கு ஜமுனாபாரி வரப்பிரசாதமாக கருதப்படுகிறது.ஜமுனா பிரியாணி: முன்னணி அசைவ உணவகங்களில் வான்கோழி பிரியாணிக்கு தனி மவுசு உள்ளது. இவ்வரிசையில்

ஜமுனாபாரியும் இடம் பிடித்துள்ளது. ஒரு கிலோ தனிக்கறி 500 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கறியை விலைக்கு வாங்குவதை விட ஆட்டுக்குட்டிகளை விவசாயிகளிடம் கொடுத்து வளர்த்தால், ஆட்டின் உரிமையாளருக்கு அதிக லாபம் கிடைக்கிறது. மதுரையில் அலங்காநல்லூர், பாலமேடு பகுதியில் இவ்வகை ஆடு வளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்கள் சுயமாகவும், கூலிக்கும் ஆடுகளை வளர்த்து வருகின்றனர். இதில் அவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கிறது.ஏற்றுமதிக்கு உகந்தது: ஜப்பான், சிங்கப்பூர், மலேசியா, ஹாங்காங், தைவான் மற்றும் அரேபிய நாடுகளுக்கு பதப்படுத்தப்பட்ட கறி ஏற்றுமதி செய்யப்படுகிறது.
மதுரையில் வளர்க்கப்படும் ஆடுகள் சென்னை சைதாப்பேட்டைக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்கு ஆட்டின் கறியை பதப்படுத்தி "டின்'களில் அடைத்து ஏற்றுமதி செய்கின்றனர். "டின்' கறிகள் வெளிநாடுகளில் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. பண்டிகை காலங்களில் கறியும், பாலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஈத்துக்கு மூன்று குட்டி: பாலமேட்டை சேர்ந்த ஜமுனாபாரி பண்ணை மேலாளர் பட்டுராஜன், ஆடு வளர்க்கும் ராஜேந்திரன் (45) கூறியதாவது: ஜமுனாபாரி ஆடுகள் ராஜஸ்தானில் அதிகளவு வளர்கிறது. அதிக உஷ்ணத்தை தாங்கும் திறன் கொண்டது. இதனால், இதில் நோய் எதிர்ப்பு அதிகளவு உள்ளது. கறியும், பாலும் வாரம் தோறும் சாப்பிட்டு வந்தால் உடல் சூட்டை குறைத்து ஆரோக்கியத்தை வளர்க்கும். ஒருமுறை மூன்று குட்டிகள் வரை ஈனும். 25 நாள் குட்டி ஒன்றின் விலை 6,000 ரூபாய். கருவுற்ற ஆட்டின் விலை 20 ஆயிரம் ரூபாய். பாசிப்பயிறு, துவரை, உளுந்து தூசி மற்றும் கடலை புண்ணாக்கு உணவாக வைக்கப்படுகிறது. வியாபார நோக்கமின்றி சொந்த உபயோகத்துக்காக வளர்க்கிறோம், என்றார்.

### பயிர்களில் பூச்சிதாக்குதலை சமாளிக்க நவீன அணுகுமுறை

மதுரை:நெல், பருத்தி, நிலக்கடலை, மக்காச் சோளம், பயறு மற்றும் காய்கறி பயிர்களில் பூச்சிமருந்து தெளிப்பதை குறைத்து தாவர, உயிரின பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்தலாம் என மதுரை விவசாயக் கல்லூரி வேளாண் அறிவியல் மைய பூச்சியியல் துறை பேராசிரியர் சந்திரமணி தெரிவித்துள்ளார்.

அவர் கூறியதாவது :பயிர்களில் "சின்தடிக் பைரித்ராய்டு' வகை பூச்சிகொல்லி மருந்துகளை பயன்படுத்தும் போது இலை தின்னும் புழுக்கள் உடனடியாக குறையும். ஆனால் சாறுஉறிஞ்சும் பூச்சிகள், அஸ்வினி, தத்துபூச்சி, மாவுபூச்சி, இலைப்பேன்கள் ஆயிரக்கணக்கில் பெருகும். ஒருங்கிணைந்த பூச்சிகட்டுப்பாட்டு முறைகளை பயன்படுத்தினால், காய்கறிகளில் நச்சுத்தன்மை குறையும். உளவியல் முறையில் பருத்திச்செடி பத்து வரிசைக்கு ஒரு வரிசை தட்டாம்பயறு வகைகளை விதைத்தால் பொறிவண்டுகள் அதிகமாகத் தோன்றும். இது பருத்தியைத் தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளைத் தின்றுவிடும். வயலைச்சுற்றிலும் ஆமணக்குச் செடிகளை பயிரிடலாம். பயிர்களை அழிக்க வரும் பூச்சிகள், ஆமணக்குச் செடியை முதலில் தாக்கும். அதை அப்படியே பிடுங்கி அழித்துவிடலாம். காய்கறி, பருத்திப் பயிர்களில் ஓட்டை காய்கள், பழுத்த இலைகள் கீழே விழுந்தாலோ, அல்லது செடியில் இருந்தாலோ உடனடியாக கையால் பறித்து, எரிக்கவேண்டும்.

பயிருக்கேற்ற இனக்கவர்ச்சிப் பொறிகளை வயல்களில் வைக்க வேண்டும். சாறுஉறிஞ்சும் பூச்சி, வெள்ளை பூச்சி, தத்துபூச்சி, அஸ்வினி பூச்சிகள் மஞ்சள் நிறத்தால் கவரப்படும். டப்பா மீது மஞ்சள் பெயின்ட் தடவி காய்ந்ததும், வேப்பெண்ணை தடவி, வயலில் குச்சியை ஊன்றி கவிழ்த்து வைக்கலாம். பூச்சிகள் அனைத்தும் எண்ணெய் மீது படிந்துவிடும். இத்தகைய பயிர் பாதுகாப்பின் மூலம் பயிருக்கு 7 முறை மருந்து தெளிப்பதற்கு பதிலாக, மூன்று முறை மட்டும் தெளித்தால் போதும். மகசூல் அதிகரிக்கும்.

### மானாவாரியில் கொண்டைக்கடலை சாகுபடி

மதுரை:கள்ளிக்குடி பகுதியில் மானாவாரி சாகுபடியில், கொண்டைக்கடலையை 2வது பயிராக சாகுபடி செய்யலாமென வேளாண் உதவி இயக்குனர் சாரநாத் பாபு தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை : முதல்

மானாவாரியில் மகசூல் கிடைக்காத விவசாயிகள், தற்போது பெய்த மழையை பயன்படுத்தி கொண்டைக்கடலை சாகுபடி செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 12 கிலோ விதைகளை விதைத்து, 90 நாட்களில் அறுவடை செய்யலாம். செடிகள் முளைத்தபிறகு, மேல்செடிகள் பனி ஈரத்திலேயே வளர்ந்து அறுவடைக்கு தயாராகி விடும். ஏக்கருக்கு 2 ஆயிரத்து 650 செலவு போக, ரூ. 7 ஆயிரத்து 350 வரை நிகர லாபம் கிடைக்கும்.

### மானிய விலையில் ஜிப்சம் உரம்

மதுரை:மதுரை செல்லம்பட்டி வட்டாரத்தில்,தற்சமயம் பயிரிட்டுள்ள நிலக்கடலையில் அதிக மகசூல் பெறுவதற்கும், மண்ணின் தன்மை பாதுகாக்கப்படவும் ஜிப்சம் உரமிடுதல் அவசியம். அடி உரமாக ஏக்கருக்கு 80 கிலோவும், மேலுரமாக மானாவாரியில் 46ம் நாளில் 80 கிலோவும், இறவையில் 40 நாளில் 80 கிலோ இடவேண்டும். செல்லம்பட்டி வேளாண்மை கிடங்கில் மானிய விலையில் ஜிப்சம் இருப்பு வைக்கப்பட்டுள்ளதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு செல்லம்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் அழக்கப்பன் தெரிவித்துள்ளார்.

### மண்புழு உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு மானியத்துடன் வங்கி கடனுதவி வழங்க ஏற்பாடு : நாகை கலெக்டர் தகவல்

நாகை : நாகை மாவட்ட விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்க மானியத்துடன் வங்கி கடனுதவி வழங்கப்பட உள்ளது என்று கலெக்டர் முனியநாதன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நாகை மாவட்டத்தில் வேளாண் வளர்ச்சிக்கு உதவும் வகையில் விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரிக்க மானியத்துடன் வங்கி கடனுதவி வழங்கப்படவுள்ளது. நாகை மாவட்டத்தில் 3 லட்சத்து 47 ஆயிரத்து 362 ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் ஆண்டுதோறும் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. காவிரி ஆற்றின் கடைமடை பகுதி மற்றும் கடலோரப்பகுதியாக நாகை மாவட்டம் உள்ளது. மேலும் அதிக மழை, வெள்ளம் மற்றும் புயல் போன்ற இயற்கை சீற்றங்கள் அடிக்கடி ஏற்படுவதால் கடைமடையில் வடிகால் திறன் குறைந்து காணப்படுவதால் 50 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பு உவர் நிலங்களாக உள்ளன.

இதனால் நெற்பயிரின் உற்பத்தி திறன் மற்றும் உற்பத்தி குறைந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் நெல் உற்பத்தி திறன் எக்டேருக்கு சுமார் 3 டன்னாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டின் சராசரி நெற்பயிர் உற்பத்தி திறன் எக்டேருக்கு சுமார் 4 டன்னாக உள்ளது. இந்நிலையில் நாகை மாவட்டத்தின் முன்னோடி வங்கியான ஐ.ஓ.பி. மண்புழு உரம் தயாரிக்க மானியத்துடன் வங்கி கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டம் நாகை மாவட்டத்தில் வருங்காலத்தில் நெற்பயிர் உற்பத்தி திறனை உறுதிப்படுத்தும் வகையில் சிறந்த தொழில் நுட்பமாக வரவேற்கப்படுகிறது. கடந்த 2007ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பிரதமரின் வேலை உருவாக்கும் திட்டத்தில் கிராமங்களில் மண்புழு உரம் தயாரிக்க ஆண்களுக்கு 25 சதவீதம் மானியமும், பெண்களுக்கு 35 சதவீதம் மானியத்துடன் வங்கி கடன் பெற கதர் கிராம அலுவலகம் வாயிலாக வழங்கப்படுகிறது. முன்னோடி வங்கி இத்திட்டத்தின் கீழ் 5 லட்சம் ரூபாய் வங்கி கடன் பெற திட்ட அறிக்கையை தயாரித்து விவசாயிகளுக்கு உதவ உள்ளது. இதற்கான சிறப்பு பயிற்சி அளிக்க சிக்கலில் உள்ள உழவர்கள் பயிற்சி மையம் முன்வந்துள்ளது. நாகை மாவட்டத்தில் உள்ள முன்னோடி விவசாயிகள், இயற்கை விவசாயிகள், பெண்கள் சுய உதவிக்குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்று பயன்பெறலாம்.

## ஈமு கோழி இறகில் அழகு பொருள் தயாரிப்பு மக்களிடம் வரவேற்பு அதிகரிப்பு

நாமக்கல்: ஈமு கோழியின் இறகில் இருந்து தயார் செய்யப்பட்ட கீ செயின், கார் பொம்மைக்கு அதிக அளவில் வரவேற்பு பெற்றுள்ளதால், அதன் விற்பனை வெளி மாநிலத்துக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது.

வீட்டை அலங்கரிப்பதற்காக பிளாஸ்டிக், ரப்பர், மரம், பைபர், கண்ணாடி உள்ளிட்ட பல்வேறு பொருட்களில் தயார் செய்யப்பட்ட அழகு பொருட்கள் �ஷா-கேசில், டேபிளில் இடம் பெற்றிருப்பதை நாம் பார்த்திருக்கிறோம். அந்த வகையில், பறவையில் இறகுகளால் தயார் செய்யப்பட்ட அலங்கார பொருட்கள் தற்போது விற்பனைக்கு வந்துள்ளது. முழுவதும் இறகுகளால் தயாரிக்கப்பட்ட கார் பொம்மைகள், கீ செயின், தூசு துடைப்பான், வீடு பெருக்கும் துடைப்பான், ஓட்டடக்குச்சி உள்ளிட்ட பொருட்கள் மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. இது குறித்து நாமக்கல் அடுத்த எலச்சிபாளையத்தில் உள்ள வி.சி., ஈமு ஃபார்ம் நிறுவன நிர்வாகி சந்திரசேகர் கூறியதாவது:

இங்கு 3,000 ஈமு கோழிகள் வளர்க்கப்படுகின்றன. அதன் இறைச்சி மற்றும் ஆயிலுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. அதன் இறகில் இருந்து பல்வேறு அழகு பொருட்கள் தயார் செய்யப்படுகின்றன. கார் பொம்மை, கீ செயின் ஆகியவை அதிகம் வாங்கிச் செல்கின்றனர். மேலும், தூசு துடைப்பான், வீடு பெருக்கும் துடைப்பான், ஓட்டடக்குச்சியும் அதிக அளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஈமு கோழியின் தோலில் இருந்து செருப்பு, பேக், மொபைல் கவர், கோட் தயாரிக்கப்படுகிறது. அதன் முட்டையில் பல்வேறு வண்ணங்களில் தேச தலைவர்கள், இயற்கை காட்சிகள், கார்ட்டூன் படம் உள்ளிட்ட பல்வேறு வகையான ஓவியங்கள் தீட்டப்பட்டு கண்ணாடி பாக்ஸில் பொருத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அதுவும் மக்களிடம் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. அதிக அளவில் கல்லூரி மாணவ, மாணவியர் கீ செயின் வாங்கி செல்கின்றனர். எங்களது தயாரிப்புகள் தமிழகத்தில் நாமக்கல், சேலம், ஈரோடு, சென்னை மற்றும் ஹைதராபாத், விஜயவாடா போன்ற வெளி மாநிலத்துக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இறகு மூலம் தயாரிக்கும் பொருட்கள் அனைத்தும் நிர்வாக அலுவலர் கண்ணகி தலைமையில் 15 பேர் மேற்கொண்டு வருகின்றனர்.இவ்வாறு அவர் கூறினார். தரமான பொருள் மற்றும் அழகு பொருட்களுக்கு மக்கள் மத்தியில் எப்போதும் வரவேற்பு அதிகரிக்கும் என்பதற்கு, ஈமு கோழி இறகில் இருந்து வடிவமைக்கப்பட்ட அலங்கார பொருட்கள் விற்பனையே எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

## வெளிநாட்டு தாவரங்களுக்கு முடிவு... உள்ளூர் தாவரங்களுக்கு விடிவு...! தாவர வகைகள் பயிற்சி முகாமில் அறிவுரை

கூடலூர் : "நீலகிரி மாவட்டத்தில் வளரும் வெளிநாட்டு தாவரங்கள், மற்ற தாவரங்கள் வளர அச்சுறுத்தலாக உள்ளன; இதை அழிப்பதால், இயற்கையாக வளரும் உள்ளூர் தாவரங்கள் அதிகளவு வளரும்' என தெரிவிக்கப்பட்டது. மலைப்பகுதி மேம்பாட்டு திட்டம் மூலம், "தாவர வகைகளை இனம் காண்பது' குறித்து, வன அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு 5 நாட்கள் பயிற்சி முகாம், கூடலூர் ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் நேற்று துவங்கியது. ஜீன்பூல் தாவரவியல் மையத்தின் உதவி வனக்காப்பாளர் நெடுஞ்செழியன் துவக்கி வைத்து பேசுகையில், ""உள்ளூர் பெயரை கொண்டு தாவரங்களை இனம் காண்பதில், இடத்துக்கு இடம் மாறுபடும்; இதைத் தவிர்க்க, தாவரங்களின் பொதுவான தாவரவியல் பெயரை தெரிந்திருப்பது அவசியம்,'' என்றார். கோவை பாரதியார் பல்கலைக் கழக தாவரவியல் பேராசிரியர் ராமச்சந்தின் பேசியதாவது:

நீலகிரி மாவட்டத்தில் வளரும் வெளிநாட்டு தாவரங்கள், மற்ற தாவரங்கள் வளர அச்சுறுத்தலாக உள்ளன; இதை அழிப்பதால், இயற்கையாக வளரும் உள்ளூர் தாவரங்கள் அதிகளவு வளரும். மருத்துவக் குணம், பொருளாதார பயன், சுற்றுச்சூழல் பாதுகாப்பில், தாவரங்கள் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.

புவி வெப்பத்தால், தேவையற்ற சில தாவரங்கள் பரவுகின்றன; இப்பகுதிகளில், தேவையற்ற 5 வகை தாவரங்கள் உள்ளன.நீலகிரியில் உள்ள 2,877 தாவரங்களில், 115 தாவரங்கள், நீலகிரியில் மட்டுமே வளரக் கூடியன; 5 தாவரங்கள், ஜீன்பூல் தாவரவியல் மையத்தில் மட்டுமே வளர்கின்றன.

பயிற்சியின் மூலம், இங்குள்ள முக்கிய தாவரங்கள் மற்றும் அழிவின் பிடியில் உள்ள தாவரங்கள் குறித்து வன ஊழியர்கள் கண்டு, பாதுகாக்க முடியும். இவ்வாறு, பேராசிரியர் ராமச்சந்திரன் பேசினார்.

தாவரங்களை இனம் காண்பது குறித்து, வன ஊழியர்களுக்கு களப்பயிற்சி அளிக்கப்பட்டது. சென்னை, திருவள்ளூர், சேலம், திருச்சி, மதுரை உட்பட பல பகுதிகளை சேர்ந்த 25 வன ஊழியர்கள் பங்கேற்றனர். தேவாலா வனச்சரகர் பாண்டிபெருமாள் தலைமை வகித்தார். ஜீன்பூல் வனச்சரகர் வேலாயுதம் முன்னிலை வகித்தார். ஐந்து நாட்கள் நடக்கும் முகாமில், "தாவர வகைகள்' குறித்து, கோவையை சேர்ந்த முன்னாள் தாவரவியல் பேராசிரியர் டாக்டர்.குருநாதன், "உலர் தாவரங்கள், அதை சேகரிப்பது மற்றும் பல்லுயிர் பெருக்கம்' குறித்து, கோவையை சேர்ந்த டாக்டர்.சத்யநாராயணன், "நீலகிரி சோலை தாவரங்களை காண்பது' குறித்து, ஊட்டி அரசு கலைக் கல்லூரி பேராசியர் ரவி, பயிற்சி அளிக்க உள்ளனர். பொதுவான தாவர இனங்கள் குறித்து, ஓய்வு பெற்ற துணை வனப் பாதுகாப்பாளர் ஜெயின் அலாவுதீன், தாவரவியல் ஆராய்ச்சியாளர் மாணிக்கம், 20ம் தேதி முதல் 22ம் தேதி வரை பயிற்சி அளிக்க உள்ளனர். முகாம் ஏற்பாடுகளை, தேவாலா வனத் துறையினர் மேற்கொண்டுள்ளனர்.

### சொல்லும் படி ஒன்றும் இல்லை... தேயிலை ஏல மையத்தில் மந்தம்

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மையத்தில், தொடர்ந்து மந்தநிலை நிலவுகிறது; வர்த்தகர்களின் பங்களிப்பு குறைந்ததால், தேயிலை தூளில் பெரும்பகுதி தேக்கமடைந்தது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில், விற்பனை எண் 2க்கான ஏலம் நடந்தது; 17.09 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக இருந்தது; இலை ரகம் 11.05 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.59 லட்சம் கிலோவும் அடங்கும். தேயிலை தூளுக்கான கிராக்கி குறைந்ததால், உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு குறைந்தது. வழக்கமாக பங்கெடுக்கும் ஆந்திரா, குஜராத், உத்தரப்பிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் வர்த்தகர்கள் குறைந்தளவே பங்கேற்று, தரமான தேயிலை தூளை மட்டும் வாங்கினர். ஏற்றுமதி வர்த்தகர்களின் பங்களிப்பு முற்றிலுமாக இல்லை; இதனால், அனைத்து ரக தூளின் விலையும், கிலோவுக்கு 3 ரூபாய் குறைந்தது. விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 40 சதவீதம் தேக்கமடைந்தது. இலை ரகத்தில், சாதாரண ரக தூளுக்கு அதிகபட்சம் 58-62 ரூபாய், சிறந்த ரகத்துக்கு 88-118 ரூபாய், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 62-65, சிறந்த ரகத்துக்கு 90-120 ரூபாய் விலை கிடைத்தது. சி.டி.சி., ரக விற்பனையில், ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 133 ரூபாய் கிடைத்தது; 65 தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில், சாம்ராஜ் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் 177 ரூபாய் விலை கிடைத்தது; 25 தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. விற்பனை எண் 3க்கான ஏலம், வரும் 21, 22ம் தேதிகளில் நடக்கிறது; மொத் தம் 14.91 லட்சம் கிலோ தேயிலை தூள் தயாராக உள்ளது.

இலை ரகம் 9.78 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.13 லட்சம் கிலோவும் அடங்கும். குன்னூர் தேயிலை ஏலத்தில் தொடர்ந்து நிலவும் மந்தம், வர்த்தகர்கள், வியாபாரிகளிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது.

### நெல்லில் குலை நோய் கட்டுப்படுத்த யோசனை

புதுக்கோட்டை : புதுகை மாவட்ட விவசாயிகள் நெல்லில் குலை நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து குடுமியான்மலை உழவர் பயிற்சி நிலைய வேளாண் உதவி இயக்குனர் சதானந்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு@ புதுகை மாவட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெல் பயிரானது வளர்ச்சி பருவம் முதல் கதிர் பருவம் வரை உள்ளது. தற்போது வானம் குளிர்ந்த சீதோஷ்ணநிலை நிலவுவதாலும் நெற்பயிரை குலை நோய் தாக்க அதிக வாய்ப்புள்ளது. குறிப்பாக அறந்தாங்கி, ஆவுடையார்கோயில், மணமேல்குடி பகுதிகளில் அதிக அளவில் பிபிடி 5204 என்ற ரகமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த ரகம் எளிதாக குலைநோய் தாக்குதலுக்கு உள்ளாகும். இந்த நோயானது இலை, கணு, கழுத்து ஆகிய பகுதிகளை தாக்கும்.

இலைகளில் நீண்ட கண் வடிவ புள்ளிகள் தோன்றும். புள்ளியின் மையப்பகுதி சாம்பல் நிறத்துடன் காணப்படும். பிறகு அவை ஒன்று சேர்ந்து இலையே கருகிவிடும்.

நோயின் தாக்குதல் அதிகமாகும் போது கணுக்களும் கதிர் காம்புகளும் கறுப்பு நிறமடைந்து ஒடிந்து விடும். இதனை கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடிக்க வேண்டும். முதலில் பயிர்களுக்கு தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். தழைச்சத்தை மேலுரமாக இடும்போது 2 அல்லது 3 பங்காக பிரித்து இடுவது நல்லது.

எக்டருக்கு கார்பென்டாசிம் 250 கிராம் அல்லது எடிபென்பாஸ் 500 மிலி அல்லது ஐசோபுரைபல் பாஸ்பரா தயோயேட் 500 மிலி அல்லது மேன்கோசெப் 500 கிராம் வீதம் விசை தெளிப்பானாக இருந்தால் 150 லிட்டர் தண்ணீரிலும், கை தெளிப்பானாக இருந்தால் 500 லிட்டர் தண்ணீரிலும் கலந்து மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும். இவ்வாறு ஒருங்கிணைந்த முறைகளை கடைப்பிடிப்பதால் குலை நோயின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

### 22ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

புதுக்கோட்டை : புதுகை மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும் 22ம் தேதி நடக்கும் என்று கலெக்டர் சுகந்தி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு@ புதுகை மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 22ம் தேதி காலை 10.30 மணிக்கு கலெக்டர் சுகந்தி தலைமையில் நடக்க உள்ளது. மாவட்ட விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் கோரிக்கைகளை தெரிவித்து பயன்பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் நீர்திறப்பு அதிகரிப்பு

மேட்டூர்: டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான நீர்தேவை அதிகரித்ததால், மேட்டூர் அணை நீர்திறப்பு நேற்று மாலை 6 மணி முதல் 8 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையில் இருந்து விநாடிக்கு 12 ஆயிரம் கனஅடி நீர் திறக்கப்பட்டது. டெல்டாவில் பரவலாக மழை பெய்ததால், 12 ஆயிரம் கனஅடியாக இருந்த டெல்டா நீர்திறப்பு கடந்த 9ம் தேதி விநாடிக்கு 8,000 கனஅடியாகவும், 12ம் தேதி விநாடிக்கு 6,000 கனஅடியாகவும், 14ம் தேதி விநாடிக்கு 4,000 கனஅடியாகவும் குறைக்கப்பட்டது.இந்நிலையில், பாசனத்திற்கான நீர்தேவை அதிகரித்தால் நேற்று மாலை 6 மணி முதல் டெல்டா நீர்திறப்பு விநாடிக்கு 8,000 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது. நேற்று மாலை அணையின் நீர்மட்டம் 82.930 அடியாக இருந்தது. விநாடிக்கு 612 கனஅடி நீர்வந்தது.

## கரும்பு விற்காததால் வியாபாரிகள் விரக்தி

இடைப்பாடி: பொங்கல் பண்டிகையின் போது விலை அதிகமாக இருந்ததால், கரும்பு விற்பனை அதிகளவில் நடக்கவில்லை. அதனால் கரும்பு வியாபாரிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தமிழர்களின் முக்கிய திருவிழா பொங்கல் பண்டிகை. பொங்கலுடன் சேர்ந்து கரும்பு வைத்து படையல் போடுவது வழக்கம். செங்கரும்புகள் கூடக்கல், பூலாம்பட்டி, கோனேரிப்பட்டி, நெடுங்குளம் ஆகிய பகுதிகளில் 500க்கும் மேற்பட்ட ஏக்கர்களில் பயிரிடப்பட்டன.இந்தாண்டு செங்கரும்பு விலை உயர்ந்தது. பொங்கல் அரிசி, சர்க்கரை, வெல்லம் உள்ளிட்ட பொருட்கள் விலை உயர்ந்ததால், கரும்பையும் அதிக விலையானாலும் கொடுத்து மக்கள் வாங்குவர் என்ற எண்ணத்தில் வியாபாரிகளும் விவசாயிகளிடம் அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளனர்.

கரும்பு விலை எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு கடுமையாக உயர்ந்தது. கடந்த ஆண்டுகளில் ஒரு கரும்பின் விலை 10 ரூபாய் வரை அதன் தரத்தை பொறுத்து விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த ஆண்டு கரும்பு விலை அதிகமானதை தொடர்ந்து 20 கரும்புகள் கொண்ட ஒரு கட்டின் விலையை 150 ரூபாயில் இருந்து 210 ரூபாய் வரை விவசாயிகள் விற்பனை செய்தனர். ஒரு கரும்பின் விலை 15 முதல் 25 ரூபாய் வரை விற்பனையானது. விலை அதிகமானதால் பொங்கல் படையலுக்காக வாங்கிய கரும்புகளின் எண்ணிக்கை பாதியாக குறைந்தது. பல இடங்களில் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு கரும்பு பாதியளவே விற்பனையானது. இது குறித்து கொங்கணாபுரத்தில் உள்ள கரும்பு விவசாயி ஆறுமுகம் கூறும்போது, ""கரும்பின் விலை கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இரண்டு மடங்கானது. சென்ற ஆண்டு விற்பனை செய்த விலைக்கே கரும்பு வேண்டும் என கேட்டு மக்கள் எங்களை வற்புறுத்தினர். வாங்கிய விலையை விட குறைத்து தர விருப்பம் இல்லாததால் விலையை நாங்கள் குறைக்கவில்லை. ஆண்டுதோறும் விற்கும் கரும்புகளின் எண்ணிக்கையில் பாதி மட்டுமே இந்தாண்டு விற்பனையானது. இன்னும் இரண்டு நாளில் விற்கப்படாமல் இருக்கும் கரும்புகள் காய்ந்து போகும் நிலை உள்ளது. நாங்கள் பெருத்த நஷ்டம் அடைந்துள்ளோம்," என்றார்.

## கனமழையால் நெற்பழம் நோய் தாக்குதல் இழப்பீடு கோரி விவசாயிகள் வலியுறுத்தல்

தஞ்சாவூர்: பூதலூர், தஞ்சை பகுதியில் கடந்த டிசம்பர் மாதம் திடீர், திடீரென பெய்த கனமழையால் அறுவடைக்கு தயாராக வேண்டிய நெல்லில் நெற்பழம் நோய் தாக்கி முழுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. டெல்டா மாவட்டத்தில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதத்தில் முழுமையாகவும், ஜனவரி மாதத்தில் குறிப்பிட்ட சில நாட்கள் கனமழை பெய்தது. இதனால், டெல்டா மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டன. இதில், தஞ்சை மாவட்டம் பூதலூர், தஞ்சை யூனியனில் சக்கரசாமந்தம், ராமநாதபுரம், ரெட்டிப்பாளையம், சித்தாயல், ராயந்தூர், நாச்சியார்பட்டி, கல்விராயன்பேட்டை உட்பட பல கிராமங்களில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான ஹெக்டேரில் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்களை கனமழையால் நெற்பழம் நோய் தாக்கியது. இந்நோய் சில பயிர்களை மட்டும் வழக்கமாக தாக்கும்.

இந்தாண்டு முழு அளவில் பெரும்பாலான வயல்களை தாக்கியதால், அனைத்து நெல்களும் பாதிப்படைந்துள்ளது. நன்று விளைந்த நெல் வெடித்து, அதில் மஞ்சள் நிறத்தில் பூஞ்சை போன்ற தோன்றத்தில் நான்கு முதல் ஐந்து மி.மீட்டர் விட்டத்தில் இவை தோன்றியுள்ளது. இவற்றை அறுவடை செய்தால் காய்ந்ததும் மாவு போன்று உதிர்ந்துவிடும். இவற்றை நெல் கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்ய மாட்டார்கள். உணவுக்கும் பயன்படுத்த முடியாது. இதுபோன்ற பாதிப்புக்கு உள்ளான பல்வேறு கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் தனித்தனியாக வந்து நேற்று தஞ்சை கலெக்டர் சண்முகத்தை சந்தித்து மனுக்கொடுத்தனர். விவசாயிகள் பஞ்சநாதம், கதிர்வேல் ஆகியோர் கூறுகையில், ""ஏக்கருக்கு எட்டாயிரம் ரூபாய் வரை செலவு செய்துள்ளோம். தற்போது, நெற்பழம் தாக்கிய கதிர்களை ஒன்றும் செய்ய இயலாது. எனவே, இந்நோய் தாக்கிய அனைத்து வயல்களையும் மாவட்ட நிர்வாகம், வேளாண் துறை அதிகாரிகள் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையாக நிவாரணம் கிடைக்கச் செய்ய வேண்டும். இந்நோய் கிருமி பிற

பகுதிகளுக்கும் பரவி வருகிறது," என்றனர். பிற விவசாயிகள் கூறுகையில், ""கடந்த சில ஆண்டாக பெரும்பாலான விவசாயிகள் பயிர் காப்பீட்டு திட்டத்தில் காப்பீடு செய்துள்ளோம். ஆனால், அத்திட்ட விதிகளின்படி, "பெரிய பரப்பிலான பகுதி ஒரே குறிப்பிட்ட நோய், வெள்ளம், மழையால் பாதித்திருந்தால் மட்டுமே நிவாரணம் வழங்க இயலும். குறிப்பாக, குறிப்பிட்ட வருவாய் பிர்காவே பாதிக்கப்பட்டிருக்க வேண்டும் என விதிகள் கூறுகிறது. ஒரே கிராமத்தில் ஆங்காங்கே பல வயல்கள் பாதிக்கப்பட்டிருந்தாலும் அவ்விதிகளின்கீழ் நிவாரணம் பெற இயலாது,' என உள்ளது. இதை மாற்ற வேண்டும். குறிப்பிட்ட வயல்கள் பாதிக்கப்பட்டால் கூட இந்த விவசாயிக்கு நிவாரணம் கிடைக்கும் படி காப்பீட்டு திட்ட விதிகளை மாற்றம் செய்ய வேண்டும்," என்றனர்.

### மழையால் பாதித்த பயிர்களுக்கு நஷ்டஈடு கோரி விவசாயிகள் மனு

தஞ்சாவூர் : மழையால் பாதித்த நெற்பயிர்களுக்கு நிவாரணம் வழங்கக் கோரி, பாதிக்கப்பட்ட பயிர்களுடன் வந்து கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.தஞ்சை அருகே சர்க்கரைசாமந்தம், சீராளூர், ஆலக்குடி, வடகால் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 5 ஏக்கரில் சம்பா பயிர் சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த மழையால் சூல் பிடித்து இருந்த பயிர்கள் அனைத்தும் நெற்பழம் என்ற நோயால் தாக்கப்பட்டது. இதனால் நெற்கதிர்கள் அனைத்தும் சாவியாகி விட்டது. எனவே பாதிக்கப்பட்ட இடங்களை அதிகாரிகள் நேரில் வந்து ஆய்வு செய்து நிவாரணம் வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பயிர்களுடன் விவசாயிகள் கலெக்டரிடம் மனு கொடுத்தனர்.

### விவசாயிகளுக்கு விதைகள் உற்பத்தி செய்யும் பயிற்சி

சின்னமனூர்: நெல், பயறு வகைகள், சிறுதானிய பயிர்களில் தரமான விதைகள் உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு வழங்க விவசாயத்துறை பயிற்சிகள் அளித்து வருகிறது. சின்னமனூர் வட்டாரத்தில் பூலானநந்தபுரம், குச்சனூர், மூர்த்திநாயக் கன்பட்டி ஆகிய கிராமங்களில் தலா 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிகள் நடக்கிறது. பயிற்சிக்கு சின்னமனூர் உதவி இயக்குநர் நகீப் தலைமை வகித்தார். மாவட்ட துணை இயக்குநர் பாரி முன்னிலை வகித்தார்.

விவசாய அலுவலர் சங்கர் வரவேற்றார்.இணை இயக்குனர் நடராசன் பேசியதாவது: தரமான விதைகள், விவசாயிகளுக்கு சப்ளை செய்ய வேண்டும் என்ற நோக்கத் தில் இந்த பயிற்சிகள் தரப்படுகிறது. மூன்று கட்டங்களாக இந்த பயிற்சிகள் தரப்படும். தரமான விதைகள் பயன்படுத்தினால் தான் உற்பத்தியை அதிகரிக்க முடியும். விவசாயத்துறை மூலம் நெல் லுக்கு 17 சதவீத பரப்பிற் கும், பயறுவகைகளுக்கு 50 சதவீத பரப்பிற்கும் மட்டுமே விதை உற்பத்தி செய்து வழங்கப்படுகிறது. விதைகள் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வேண்டும் என்பதற்காகத் தான், விவசாயிகளே விதைகளை உற்பத்தி செய்து தரும் திட்டம் துவக்கப் பட்டுள்ளது என்றார்.பயிற்சி முகாமில் விதை ஆய்வாளர் மதன், விவசாய துணை அலுவலர் குமரன், உதவி அலுவலர்கள் அன்புக்காமன், ஜானகிராமன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### விவசாய தொழிலாளர்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க உத்தரவு

தேனி : தேனியில் ஜனவரி 27ல் நடைபெற உள்ள விவசாய தொழிலாளர் சேர்க்கை முகாமில், நிவாரணத் தொகையை உடனுக்குடன் வழங்க கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார். தமிழ்நாடு விவசாய தொழிலாளர், விவசாயிகள் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் முதல்கட்டமாக நான்கு தாலுகாக்களிலும் ஜனவரி 12 ல் குறிப்பிட்ட கிராமங்களில் நடத்தப்பட்டது.

ஜனவரி 27ல் போடி தாலுகாவிலுள்ள பூதிப்புரம், சிலமலை, சில்லமரத்துப் பட்டி, போ.மீனாட்சிபுரம் கிராமங்களிலும், உத்தமபாளையம் தாலுகாவிலுள்ள சின்னமனூர், கருங்கட்டான்குளம், எரசக்கநாயக்கனூர்,

குச்சனூர், கோம்பை, கூடலூர் கிராமங்களிலும், ஆண்டிபட்டி தாலுகாவில் பாலூத்து, தெப்பம்பட்டி, டி.சுப்புலாபுரம், ராஜேந்திராநகர் கிராமங்களில் நடத்தப்படுகிறது. தேனி தாலுகாவில் கொடுவிலார்பட்டி, வெங்கடாசலபுரம், உப்பார்பட்டி, வீரபாண்டி, பெரியகுளம் தாலுகாவில்த தாமரைக்குளம், ஜெயமங்கலம், மேல்மங்கலம், வடபுதுப்பட்டி கிராமங்களில் முகாம் நடக்கிறது. அந்தந்த கிராமங்களில் காலை ஒன்பது மணி முதல் மாலை ஆறு மணி வரை, நியமிக்கப்பட்டுள்ள தாசில்தார் அல்லது துணை தாசில்தார் நிலையிலான அதிகாரிகள் உறுப்பினர் சேர்க்கை மனுக்கள் பெறுவர். முதியோர் உதவித்தொகை, இந்திராகந்தி தேசிய முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம், ஊனமுற்றோர் ஓய்வூதியம், கணவனால் கைவிடப்பட்டோர் ஓய்வூதியம், விவசாயத்தொழிலாளர் ஓய்வூதியம், முதிர் கன்னியர் ஓய்வூதியம் போன்றவை கேட்டு மனுக்கள் பெறப்படும்.நிவாரணத் தொகை கேட்டு வரும் மனுக்கள் மீது,அன்றைய தினமே விசாரணை செய்து, முடிவு எடுத்து, அதற்கான காசோலைகளை தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அதிகாரிகளுக்கு கலெக்டர் முத்துவீரன் உத்தரவிட்டுள்ளார்

### வெப்பகதிர்வீச்சை வாழைநார் தடுக்கும் : ஸ்ரீவை.,கல்லூரி கருத்தரங்கில் தகவல்

ஸ்ரீவைகுண்டம்: வெப்ப கதிர்வீச்சை வாழைநார் தடுக்கும் என்ற அரிய தகவலை ஸ்ரீவைகுண்டம் கல்லூரியில் நடந்த மாநில அளவிலான இயற்பியல் கருத்தரங்கில் தகவல் வெளியிட்டனர். ஸ்ரீவைகுண்டம் கே.ஜி.எஸ்.கல்லூரியின் இயற்பியல் துறை சார்பில் மாநில அளவிலான தொழில்நுட்ப ஆராய்ச்சி கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி கலையரங்கில் நடந்த கருத்தரங்கிற்கு கல்லூரியின் முதல்வர் சங்கரநாராயணன் தலைமை வகித்தார். துறைத் தலைவர் அருள்அல்போன்ஸ் முன்னிலை வகித்தார். பேராசிரியர் சின்னதம்பி வரவேற்றார். முதல்வர் சங்கரநாராயணன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து பேசியதாவது, இதுபோன்ற மாநில அளவிலான நிலையில் நடக்கும் கருத்தரங்கில் கலந்து கொண்டு திறமைகளை வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு ஆளுமைதிறன் அதிகரிக்கிறது. கடின உழைப்பும், வெற்றியை பற்றிய சிந்தனையும் இடைவிடாது இருக்க வேண்டும். உயர்ந்த வெற்றிகளை பெரும் சாதனையாளர்களை இதுபோன்ற கருத்தரங்குகள் உருவாக்குகிறது என்று பேசினார். துணைதலைவர் அருள்அல்போன்ஸ் நன்றி கூறினார். கருத்தரங்கின் முதல் அமர்வில் கல்பாக்கம் அணுமின்நிலைய விஞ்ஞானி சிவகுமார் -குவாண்டம் இன்டர்பிரன்ஸ்- என்ற தலைப்பில் அதிகப்படியான துகள்கள் ஒன்று சேர்வதால் ஏற்படும் குறுக்கிட்டு விளைவுகள் பற்றி படங்கள் மூலம் விளக்கினார். இரண்டாம் அமர்வில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக இயற்பியல் துறை தலைவர் வேலுராஜா -பாலிமர் மற்றும் மூலக்கூறுகள்- என்ற தலைப்பில் பேசினார். வாழைநாரில் இருந்து கிடைக்கும் பாலிமரை கொண்டு வெப்பகதிர்வீச்சை தடுக்கும் சாதனமாகவும், புளியங்கொட்டையில் இருந்து கிடைக்கும் பாலிமர் இழையை எலும்பு முறிவு வைத்தியத்திற்கும் பயன்படுத்தலாம் என்று கூறினார். இரண்டாம் நாள் காலையில் முதல் அமர்வில் காமராஜ் பல்கலைகழக பேராசிரியர் உமாபதி சூரிய கதிர்களை பற்றியும் அதிலிருந்து வெளிவருகிற ஆற்றல்களை பற்றியும் குறிப்பாக மிக சிறிய நேர இடைவெளியில் வெளிப்படும் சூரிய ஆற்றல்களை பற்றி கூறினார்.நிறைவு விழாவில் பேராசிரியர் அருணாசலம் தலைமை வகித்தார். துறைத் தலைவர் அருள்அல்போன்ஸ் வரவேற்றார். பாபா நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடந்த வினாடி வினா கட்டுரை போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினர். கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் நன்றி கூறினார். கருத்தரங்கில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 50க்கும் மேற்பட்ட பேராசிரியர்களும், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவிகளும் கலந்து கொண்டனர்.

### வாழை சாகுபடிக்குமானியம் வழங்கல்

தென்காசி:செங்கோட்டை பகுதியில் வாழை சாகுபடிக்கு மானியம் வழங்கப்படுகிறது என தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:செங்கோட்டை வட்டாரத்தில் தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள வாழை பயிருக்கு மானியம் வழங்கப்படுகிறது. இப்பகுதியில் உள்ள வாழை விவசாயிகள் தங்களின் நிலத்திற்கான வி.ஏ.ஓ.வின் அடங்கல், ரேஷன் கார்டு ஜெராக்ஸ், விவசாயின் இரண்டு பாஸ்போர்ட்

சைஸ் போட்டோ, 3 மாத வயதுடைய வாழை வயலுக்குள் விவசாயி நின்றவாறு உள்ள இரண்டு போட்டோக்கள் உள்ளிட்ட ஆவணங்களுடன் செங்கோட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் வரும் 25ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.ஒரு ஹெக்டேருக்கு நீரில் கரையும் 19:19:19 உரம் 55 கிலோவும், சூடோமோனஸ் 20 கிலோவும் முழு மானியத்தில் வழங்கப்படும். இவற்றின் மதிப்பு 7 ஆயிரத்து 181 ரூபாய் ஆகும். புதிய பரப்பில் வாழை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் உடனடியாக பதிவு செய்து கொள்ளும்படி செங்கோட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### துல்லிய பண்ணைய திட்டத்தில் கரும்பு சாகுபடி மகசூல் அதிகரிப்பு

வானூர் : துல்லிய பண்ணையத்தில் கரும்பு சாகுபடி மகசூல் அதிகரித்துள்ளதாக வேளாண் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து வானூர் வேளாண்மை உதவி இயக் குநர் (பொ)கென்னடி ஜெபக்குமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:துல்லிய பண்ணையம் திட்டத்தின் கீழ் வானூர் பகுதியில் நைனார்பாளையம், புதுப்பாக்கம், பொம் பூர், கிராமங்களில் சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயிகள் கரும்பு, மணிலா, தர்பூசணி பயிர்கள் சாகுபடிக்கு நீர் பராமரிப்பு, உர நிர்வாகம் செய்து வருகின்றனர்.சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயம் செய்வதால் பயிர்களுக்கு தேவையான சீரான நீர் கிடைப்பதால் களை கட்டுபடுத்தப்படுகிறது. இதன் மூலம் வேர்களுக்கு காற்றோட்டம் கிடைப்பதால் பயிர் வளர்ச்சி நன்றாக உள்ளது.மேலும் நீரில் கரையும் உரங்களை 2-3 தினங்களுக்கு ஒருமுறை சொட்டுநீர் பாசனம் மூலம் அளிப்பதால் பயிர்களுக்கு அறுவடை வரை சீரான சத்துக்கள் கிடைத்து மகசூல் அதிகரிக்கிறது.விவசாயிகள் குறைந்த பாசன நீரினை பயன்படுத்தி அதிக பரப்பில் சாகுபடி செய்யலாம். குறைந்த அளவில் நான்கு மற்றும் ஐந்து மணி நேரம் மின்சார மோட்டார் பம்பு செட் மூலம் நிலம் முழுமைக்கும் நீர் பாய்ச்சலாம்.இதனால் தண்ணீர் பாய்ச்ச வேலை ஆட்கள் தேவையில்லை. நில உரிமையாளரே பார்த்து கொள்கின்றனர்.

சொட்டுநீர் பாசனத்தால் தண்ணீர் பாய்ச்சுவது, வாய்க்கால் சீரமைப்பது உள்ளிட்ட செலவுகள் மிச்சமாகிறது. செலவு குறைவில் அதிக மகசூல் கொடுக்கும் சொட்டுநீர் பாசனத்தை அதிகளவில் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு அரசு வேளாண் துறை மூலம் 65 சதவிகித மானியத்தில் சொட்டு நீர்பாசனம் அமைத்திட உதவி செய்வதுடன் துல்லிய பண்ணையம் விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயில் நீரில் கரையும் உரங்கள் இலவசமாக வழங்கப் படுகிறது.

### விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண்ணீர் பாசன கருவிகள்

விழுப்புரம் : மாவட்டத்தில் பயறு மற்றும் மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண் ணீர் பாசன கருவிகள் விநியோகம் செய்யப்படுகிறது.இது குறித்து வேளாண் இணை இயக்குனர் ராமலிங்கம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயறு மற்றும் மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகள் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் அமைக்க ஹெக் டேருக்கு 7500 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் மூலம் நீர்பாசனம் செய் யும் போது குறைந்த தண் ணீரைக் கொண்டு அதிக சாகுபடி பரப்பிற்கு தண்ணீர் பாசனம் செய்ய முடியும். பயிர் அறுவடைக்கு பிறகு தெளிப்பு நீர் பாசனக் கருவிகளை வயலில் இருந்து அப்புறப்படுத்தி அடுத்த பருவத்தில் சாகுபடி செய்யும் போதும் பயன்படுத்தலாம். இந்த கருவிகள் குறைந்த பட்சம் 3 ஆண்டுகளுக்கு நல்ல தரத்துடன் செயல்படும் திறன் கொண்டவை. அரசால் அங்கீகரிக்கப் பட்ட நிறுவனங்களில் இருந்து கொள்முதல் செய் யப்படும் கருவிகளுக்கு மானியம் வழங்கப்படும். அத்துடன் துவரை சாகுபடியை ஊக்கப்படுத்த துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், உரங்கள் மற்றும் சாகுபடி செய்யும் செலவுகளுக்காக ஒரு ஹெக்டேருக்கு 5000 ரூபாய் மற்றும் நுண்ணீர் பாசன கருவிகள் அமைக்க 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்.

நீர் ஆதாரம் குறைந்து வரும் இந்த காலக்கட் டத்தில் நுண்ணீர் பாசனக் கருவிகளை கொண்டு பாசனம் செய்தால் மட்டுமே அதிக பரப்பில் பாசனம் செய்ய முடியும். எனவே நுண்ணீர் பாசனக் கருவிகளை கொண்டு பாசனம் செய்யும் தொழில் நுட் பத்தை கடைபிடித்து அரசால் வழங்கப்படும் மானியத்தை விவசாயிகள் பயன் படுத்திக் கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அருகிலுள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் வேளாண்மை இணை இயக்குனர் ராமலிங்கம் தெரிவித்துள்ளார். �

## பருத்திக்கு பயிர் காப்பீட்டு திட்டம்

விருதுநகர்: விருதுநகர் வேளாண்மை விரிவாக்க மைய உதவி இயக்குனர் முத்துகிருஷ்ணனின் செய்திக் குறிப்பு: மத்திய மாநில அரசின் வானிலை பயிர் காப்பீட்டுத் திட்டமானது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வரையறுக்கப்பட்ட பகுதியில் பருவ காலமாற்றங்களை அனுசரித்து ஒரு விவசாயியின் குறைவான விளைச்சலை காப்பீடு மூலம் ஈடுசெய்தல் ஆகும். இத்திட்டத்தில் பயிர்களுக்கு மகசூல் குறைவதற்கான காரணங்களை அறிவியல் பூர்வமாக கண்டறிந்து ஈட்டுத் தொகை வழங்கப்படுகிறது. குறைந்த வெப்ப நிலை, அதிக வெப்பநிலை வானில் உள்ள ஈரப்பதம்,காற்றின் வேகம், தேவையற்ற கூடுதல் மழை ஆகியன பயிர்களின் பாதிப்புக்கு காரணமாகும்.இத்திட்டம் விருதுநகர் வட்டாரத்தில் தற்சமயம் செயல்பாட்டில் உள்ளது. பருத்தி விவசாயிகள் சேர ஜன. 31ம் தேதியுமாகும். பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள் காப்பீட்டு மதிப்பு 10 ஆயிரம் ரூபாய்க்கு செலுத்த வேண்டிய பிரிமியம் சேவை வரிகள் உள்ளிட்டு 662 ரூபாயாகும்.

## வாழையில் 'மஞ்சள்' நோய் தாக்கு: விவசாயிகள் கவலை

காரியாபட்டி : வாழைகள் "மஞ்சள்' நோய் தாக்கி பாதிக்கப்பட்டதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.காரியாபட்டி பகுதியில் 100க்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழைகள் பயிரிடப்பட்டன. மழையை நம்பி சிலர் ஏக்கர் கணக்கில் விவசாயம் செய்தனர். உரிய நேரத்தில் மழை பெய்யாததால் வாழைகள் பாதிக்கத் தொடங்கின. கிணற்று பாசனத்தின் மூலம் தண்ணீர் பாய்ச்சி வாழைகளை பாதுகாக்க விவசாயிகள் அதிக அளவில் செலவு செய்தனர். இந்நிலையில் வளர்ந்து குலை தள்ளும் நேரத்தில் மழை பொய்த்து "வெண்பா' விழுந்ததால் மஞ்சள் நோய் தாக்கியது.

அத்துடன் கிழங்கு பகுதியில் புழுக்கள் உருவாகி தண்டு பகுதிகளை சேதப்படுத்தியதையடுத்து வேர் பகுதிகள் அழுகி பிஞ்சிலே வெம்பி உதிர்ந்து வருகிறது. முற்றிலும் பாதிக்கப்பட்ட நிலையில் உழைத்த கூலிகூட கிடைக்கவில்லையே என விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.இது குறித்து விவசாயி ராமராஜ் கூறுகையில்: மற்ற விவசாயங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வாழை கை கொடுக்கும் என நம்பினோம். உரிய நேரத்தில் மழை இல்லாமல் வெண்பா விழுந்து, புழுக்கள் தாக்கியதால் வாழைகள் அனைத்தும் அழுகி வருகிறது. வாழையும் கைகொடுக்காமல் ஆயிரக்கணக்கில் செலவு செய்து இவ்வாறு நஷ்டத்தை ஏற்படுத்தியது. விவசாயத்தில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருவதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள் ளோம். விவசாயிகளுக்கு அரசு உரிய நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறினார்.

## மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்பதற்கு ஆர்வம் : அறுவடை துவக்கத்திலேயே வரத்து அதிகரிப்பு

உடுமலை : மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்க விவசாயிகள் ஆர்வம் காட்டுவதால் ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு அறுவடை துவக்கத்திலேயே வரத்து அதிகரித்துள்ளது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு குடிமங்கலம் பகுதியில் பல ஆயிரம் ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டது. அறுவடை கடந்த இரண்டு வாரங்களாக தீவிரமடைந்துள்ளது. பொங்கல் பண்டிகையால் தாமதமடைந்த அறுவடை பணிகள் மீண்டும் துவங்கியுள்ளது. சில ஆண்டுகளாக மக்காச்சோளத்தை இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும் போது விற்க

விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனால், சீசன் சமயங்களில் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் உள்ள கிடங்குகள் நிரம்பி வருகிறது. குடிமங்கலம் பகுதி விவசாயிகளுக்கு பெதப்பம்பட்டியில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் இயங்கி வருகிறது. அறுவடை துவங்கியது முதல் விற்பனை கூட உளர்களத்தில் மக்காச்சோளத்தை காய வைத்தல் மற்றும் இருப்பு வைக்கும் பணிகளையும் விவசாயிகள் துவக்கியுள்ளனர். விளைநிலங்களிலேயே மக்காச்சோளத்தை இருப் வைக்கும் பணிகளும் நடக்கிறது.

ஒழுங்கு முறை விற்பனை கூட அதிகாரிகள் கூறியதாவது: பெதப்பம்பட்டி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் 600 மெட்ரிக் டன் கொள்ளளவு உடைய குடோன்கள் உள்ளன.
விளை பொருட்களை காய வைக்க தேவையான உலர்களங்கள் உள்ளது. கிராம நிர்வாக அலுவலர் சான்றிதழ், பட்டா பாஸ் புக் நகல் ஆகிய ஆவணங்கள் பெற்றிருந்தால் 100 மூட்டை மக்காச்சோளத்தை ஒரு விவசாயி இருப்பு வைக்கலாம்.

இருப்பு வைக்கப்பட்டுள்ள விளை பொருட்களின் விலை வீழ்ச்சி காலங்களில் விவசாயிக்கு பொருளின் மதிப்பில் குறைந்த வட்டிக்கு பொருளீட்டு கடன் வழங்கப்படுகிறது. கூடங்களில் இருப்பு வைப்பதன் மூலம் விளை பொருட்களை பூச்சி, எலி தொல்லைகளில் இருந்து பாதுகாக்கலாம். இந்தாண்டு அறுவடை துவக்கத்திலேயே மக்காச்சோளத்திற்கு நல்ல விலை கிடைக்கிறது.

வளாக உளர் களங்களில் காய வைக்கப்படும் சோளத்தை இடைதரகர் இல்லாமல் நேரடியாக விற்பனை செய்ய முடியும். கடந்த வாரம் மூட்டை 900 ரூபாய்க்கு 200 மூட்டை மக்காச்சோளம் வளாகத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது. அறுவடை தீவிரமடைந்துள்ளதால் தொடர்ந்து, வரத்து அதிகரித்து வருகிறது. விவசாயிகள் தங்கள் விளைபொருளுக்கு உரிய விலை கிடைக்கவும், விலை வீழ்ச்சியினால் பாதிக்கப்படாமல் இருக்கவும் ஒழுங்கு முறை விற்பனை கூடங்களை அணுகலாம் இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## சீசனுக்கு தயாராகும் சிம்ஸ் பூங்கா நடவு பணி துவங்கியது

பதிவு செய்த நாள் 1/19/2010 12:44:17 AM



குன்னூர்: இந்தாண்டு கோடை சீசனுக்கு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க குன்னூர் சிம்ஸ் பூங்காவில் மலர் செடிகளை நடவு செய்யும் பணி நேற்று துவங்கியது. ஏற்கனவே கடந்த 3 ஆண்டுக்கு முன் இப்பூங்கா மூன்றரை ஏக்கர் பரப்பு விரிவாக்கப்பட்டது. அனைத்து பகுதிகளிலும் கோடை சீசனுக்காக ஆண்டுதோறும் மலர்ச் செடிகள் நடவு செய்யப்பட்டு வருகிறது. இந்தாண்டு கோடை சீசனுக்காக 90 ஆயிரம் மலர் செடிகள் பிப்ரவரி 15ம் தேதிக்குள் நடவு செய்ய தோட்டக்கலை துறையினர் திட்டமிட்டுள்ளனர். இதுகுறித்து குன்னூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராமகிருஷ்ணன் கூறியதாவது:

கோடை சீசனுக்காக பூங்காவில் ஆஸ்கர், மேரிகோல்டு, இன்கா டயன்டஸ், ஜின்னியா, சால்வியா, குட்டை ரக டேலியா, டை ஜீனியம் மற்றும் ரோஜா மலர் செடிகள் என 90 ஆயிரம் மலர் செடிகள் நடவு செய்யப்பட உள்ளது. இன்று (நேற்று) துவங்கிய இப்பணி அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் நிறைவு பெறும். பழைய பூங்கா பகுதியில் இருந்து விரிவுபடுத்தப்பட்ட பூங்காவிற்கு செல்ல ரூ.3 லட்சம் செலவில் இணைப்பு பாலம் அமைக்கப்படும். மேலும் ரூ.10 லட்சம் செலவில் செயற்கை நீரூற்றும்  ஏற்படுத்தப்படும்.

இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தோட்டக்கலை துறையை சேர்ந்த பொறியியல் பிரிவு அதிகாரிகளும் இது தொடர்பாக ஆய்வு செய்துள்ளனர். இப்பணிகள் அனைத்தும் கோடை சீசனுக்குள் நிறைவு பெற்றுவிடும். இந்தாண்டு கோடை சீசன் காலத்தில் இப்பூங்காவிற்கு அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வந்து செல்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிதாக நடவு செய்யப்படும் மலர் செடிகள் சுற்றுலா பயணிகளை கவர்ந்திழுக்கும்.

## விவசாய கருவிகள் சேவை மையம்

பதிவு செய்த நாள் 1/19/2010 7:37:14 AM

சேலம்: காடையாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வேளாண் இயந்திர சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் குறைந்த வாடகையில் விவசாய கருவிகள் கிடைக்கும்.
தமிழக கூட்டுறவுத் துறை அமைச்சர் அறிவிப்பின்பேரில், தமிழகத்திலேயே முதல் முறையாக சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் காடையாம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் வேளாண் இயந்திர சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை மாவட்ட ஆட்சியர் சந்திரகுமார் தொடங்கி வைத்து பேசியதாவது:
வேளாண்மையில் பயன்படுத்தக்கூடிய ட்வைன்ஸ் கல்டிவேட்டர், டிஸ்க் கலப்பை, ரோட்டவேட்டர், பவர் வீடர், மல்டி கிராப் த்ரேசர், டிராக்டர் போன்ற கருவிகளை வாங்க பயன்படுத்த இயலாத சிறு குறு விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ரூ.13 லட்சம் மதிப்பிலான வேளாண் இயந்திரக் கருவிகள் இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ளது. இதனை கூட்டுறவு மனப்பான்மையோடு பயன்படுத்தி உயர வேண்டுமென விவசாயிகளை ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தனி அலுவலர் ராமதாஸ், பொது மேலாளர் ராமசாமி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கருணாநிதி, ஓமலூர் சரக துணைப்பதிவாளர் மனோகரன், உதவி வேளாண் இயக்குநர் சுந்தர், உதவி வேளாண் பொறியாளர் செந்தில்நாதன், நபார்டு உதவி பொது மேலாளர் மணிமேகலை மற்றும் முன்னோடி விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் 15 மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு தலா ரூ.60 ஆயிரம் சுழல்நிதி கடன் வழங்கப்பட்டது. சங்க தனி அலுவலர் ரவிச்சந்திரன் வரவேற்றார். செயலாளர் கருணாநிதி நன்றி கூறினார்.

## ஜன.22ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நாள் 1/19/2010 7:12:45 AM

மதுரை: மதுரை மாவட்ட ஆட்சியர் மதிவாணன் விடுத்துள்ள அறிக்கை:

ஜனவரி மாதத்திற்கான வட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 22ந் தேதி நடக்கிறது. கலெக்டர் அலுவலக பல்நோக்கு அரங்கில் காலை 10.30 மணிக்கு நடக்கும் இக்கூட்டத்தில் விவசாயம் தொடர்பான அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்கின்றனர். இதில் விவசாயிகள் கலந்துகொண்டு குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.